விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 14 வெள்ளிக்கிழமை (28.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 040

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்காக

# அரசு தாக்கல் செய்த அனைத்து வேட்பு மனுக்களும் நிராகரிப்பு!

## கட்சிப் பெயர் தவறு எனச் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும் தேர்தல் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற பெயரில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும் எனினும் அப் பெயரில் கட்சி எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யாழ்.மாவட்டத்திலுள்ள 13 பிரதேச சபைகளும், 03 நகரசபைகளும் அடங்கலாக அனைத்திலும் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## மார்ச் 17ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத்தாக்கல் நேற்று நண்பகல் 12.00 மணியுடன் முடிவடைந்த பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேநேரம் (20ஆம் பக்கம் பார்க்க)

## வாய்ப்பை இழக்காத தமிழ்க் கூட்டமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 3 பிரதேச சபைகளுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 2பிரதேச சபைகளுக்கான மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அந்த சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை இழக்கவில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் கூட்டமைப்பு

(நுவரெலியா)

நுவரெலிய மாவட்டத்தின் ஐந்து பிரதேச சபைகளிலும் இரண்டு நகர சபைகளிலும் போட்டியிடும் முகமாக மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும், எஸ்.சதாசிவம் தலைமையிலான இலங்கை ஜனநாயக் ஐக்கிய முன்னணியும் இணைந்து மலையக தமிழ் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

அம்பகமுவ பிரதேச சபை, ஹங்குரன் கெத்த பிரதேச (19ஆம் பக்கம் பார்க்க)

GPRS Settings களுக்கு
அழுத்துங்கள்
#107#
Messaging & Settings → Settings
Dialog

## பிரதான அரசியல் கட்சிகள் நீதிமன்றம் செல்லத் தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக பிரதான கட்சிகள் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் பல மாவட்டங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த நிராகரிப்பிற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட ஒருவரின் தவறு காரணமாக இந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தவறுகள் காரணமாக தமது கட்சி வேட்பு மனுக்கள் சில நிராகரிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் நெருக்கடி நிலையில்!

### ஐ.நா.கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. யுத்தம் நிறைவடைந்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இடம்பெயர் முகாம்களில் தங்கியிருப்பவர்களும் மீள் குடியேற்றப்பட்டவர்களும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதாபிமான விவகாரச் செயலாளர் கெதரீன் பராக் தெரிவித்துள்ளார்.


மீள் குடியேற்றப்பட்ட மக்கள் பல்வேறு வசதிகளின்றி இன்னமும் அல்லலுறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் பாரியளவு பங்களிப்பினை வழங்கியுள்ளது. எனினும் இன்னமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மற்றும் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஐக்கிய நாடுகளின் நிபுணர் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிவில் நீதிமன்றக் கட்டமைப்புக்குள் இராணுவ நீதிமன்றம் உள்ளடங்காது

### முன்னாள் நீதியரசர் விளக்கம்

(கொழும்பு)



தண்டனை வழங்கும் அதிகாரம் இருப்பதால் மாத்திரம் இராணுவ நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதிமன்றமா? என்பது தொடர்பில் கேள்வி எழுவதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா இரண்டாவது இராணுவ நீதிமன்றத்திற்கு எதிராக தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையின் போது, எழுந்த இராணுவ நீதிமன்றம் ஏற்றுக் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத் தேர்தலை எதிர்பார்க்கும் ஜே.வி.பி.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஜனநாயக முறையில் நடைபெறுமா என சந்தேகம் எழுந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

ஜேவிபி. நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வேட்பு மனுத் தாக்கல் செய்தது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777

London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## அம்பாறை மாவட்டத்தில் 53 மனுக்கள் நிராகரிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு 164 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவற்றில் ஐந்து அரசியல் கட்சிகளினதும், 48சுயேட்சை குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச சபைக்கு இலங்கை தமிழரசு கட்சியினால் தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ள அதே வேளை ஈழவர் ஜனநாயக முன்னணியினால் (ஈரோஸ்) காரைதீவு, திருக்கோவில் மற்றும் ஆலையடிவேம்பு போன்ற பிரதேச சபைகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களும், தெஹியத்தகண்டியில் ஜன செத்த பெரமுனவினால் தாக்கல் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# ஜனநாயகத்துக்கு எதிரான ஆட்சிக்கு எதிர்ப்பு; உள்ளூராட்சி தேர்தல் போட்டி தவிர்ப்பு!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தாயகத்தில் நிலவும் ஜனநாயகத்திற்கு எதிரான ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக தமது கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதனை தவிர்த்துக் கொள்ளுகின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கையான இரு தேசங்கள் ஒரு நாடு என்ற நிலைப்பாட்டில் உறுதியாயுள்ளவர்களை இனங்கண்டு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை எமது கட்சி தயார்ப்படுத்தியிருந்தது.

எனினும் தமிழர் தாயகப் பகுதியில் அண்மைக் காலங்களாக மீண்டும் அதிகரித்துள்ள கொலைகள் மற்றும் கடத்தல்கள் காரணமாக மக்கள் மத்தியில் மரணபயம் அதிகரித்துள்ளது.

இதற்கும் மேலாக தாயகப் பிரதேசம் எங்கும் இராணுவம் நேரடியாக தலையிட்டு வர்த்தகப் பிரமுகர்களையும், சமூகத் தலைவர்களையும் அச்சுறுத்தி ஆளும் கட்சியில் வேட்பாளர்களாக போட்டியிடுமாறு நிர்ப்பந்தித்துள்ளது.

பாதுகாப்பு என்ற போர்வையில் இராணுவ சோதனைக் கெடுபிடிகளும், இராணுவ வீதிரோந்து நடவடிக்கைகளும், இராணுவ மோட்டார் சைக்கிள் அணியினரின் பொது மக்களை கிலிகொள்ள வைக்கும் வகையிலான ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது எத்தகைய இராணுவக் கெடுபிடிகள் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டதோ அதேயளவு கெடுபிடிகள் தற்போதும் மேற்கொள்ளப்படுகின்றன.

சகல சிவில் நிர்வாக விடயங்களிலும் இராணுவத் தலையீடு தலைவிரித்தாடுகின்றது. ஜனநாயகம் முழுமையாக மறுக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் இத்தேர்தல் அர்த்தமற்ற ஒன்றாக காணப்படுகின்றது.

இராணுவத்தினரை பயன்படுத்தி அரசு மேற்கொண்டுவரும் இந்த ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கியிருப்பதென த.தே.ம.மு தீர்மானிக்கின்றது.

இத் தேர்தலில் போட்டியிடுவதனைத் த.தே.ம.மு தவிர்த்துக் கொண்டிருந்தாலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தாயகத்து மக்களையும், புலம்பெயர் தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு சர்வதேச சமூகத்தின் உதவியுடன் இரண்டு தேசங்கள் ஒரு நாடு என்ற கொள்கை அடிப்படையில் அரசியல் தீர்வை அடைந்து கொள்வதற்கான பயணத்தில் உறுதியுடன் ஈடுபடும் என்றுள்ளது. (எ)

## மோ.சைக்கிள் விபத்து மாணவன் படுகாயம்

மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவன் ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெற்றது.

இச்சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த ஆனந்தராஜா சுஜந்தன் (வயது 7) என்ற மாணவன் பாடசாலைக்கு செல்லும் வழியில் விபத்துக்குள்ளானார்.

தலையில் பலத்த காயத்துக்குள்ளான அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## புலிகளின் ஆயுதங்களை பயன்படுத்தி கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆயுதங்களைக் கொண்டு தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் பொதுமக்களை அச்சுறுத்திய பயங்கர கொள்ளைக் கும்பலொன்று கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நீதிமன்றத்துக்கு நேற்று அது தொடர்பில் குற்றப்புலனாய்வு பொலிஸாரால் விசேட அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வறிக்கையிலேயே புலிகளின் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்ட விடயம்குறிப்பிடப்பட்டிருந்தது.

மாத்தறை திஹகொடை, ஹக்மனை, ஊறுபொக்கை, தெனியாய, மொரவக்க ஆகிய பிரதேசங்களில் குறித்த பாதாள உலகக் கோஷ்டியினர் கொலைகள், பெரும் கொள்ளைகள் மற்றும் கப்பம் அறவிடல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அத்துடன் பல்வேறு கட்டங்களில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் மூலமாக பொதுமக்களை அச்சுறுத்தியதாகவும் அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவற்றைக் கருத்திற் கொண்ட கொழும்பு குற்றப்புலனாய்வுத்துறையினர் நேரடியாக தெனியாய சென்று குறித்த பாதாள உலகக் கோஷ்டியினரைக் கைது செய்துள்ளனர். தற்போது தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-5)

## இலங்கையில் மனித உரிமை மீறல்; விழாவை புறக்கணித்த எழுத்தாளர்

(காலி)

இலங்கையின் காலி நகரில் நடக்கும் இலக்கிய விழாவுக்கு புத்தக பிரியர்கள் பலர் மிகுந்த ஆர்வத்துடன் கூடியிருக்கிறார்கள். ஆனால் அந்த விழாவை புறக்கணிப்பதாக அங்கு வந்திருந்த தென்னாபிரிக்க எழுத்தாளர் தாமுன் ஹல்கட் அறிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் குறித்த நிலைமையை காரணம் காட்டி அவர் அந்த விழாவை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளார்.

பாரிஸை தளமாகக் கொண்ட செய்தியாளர்களுக்கான அமைப்பான ரிப்போர்ட்டர் சான் பிரண்டையர்ஸ் மற்றும் வெளிநாட்டில் வாழும் இலங்கையின் செய்தியாளர்கள் அமைப்பு ஒன்று ஆகியன வெளியிட்ட விழாவைப் புறக்கணிப்பதற்கான அழைப்பை தாமுன் ஹல்கட் கவனத்தில் எடுத்திருக்கிறார். இந்த அழைப்புகளுடன் சேர்ந்து சில பிரபல எழுத்தாளர்களும் இந்த அழைப்பை விடுத்திருந்தனர்.

விழா ஆரம்பித்தவுடனே பிரபல எழுத்தாளர் தாமுன் ஹல்கட் விழாவைப் புறக்கணிக்க முடிவு எடுத்திருப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்தார்கள்.

இலங்கையில் மாற்றுக் கருத்தாளர்களின் குரல்கள் அடக்கப்படுவதால் அங்கு இந்த நிகழ்வை நடத்துவது உகந்ததல்ல என்று அந்த விழாவைப் புறக்கணிக்குமாறு கோரியவர்கள் கேட்டிருந்தனர்.

இலங்கையில் மனித உரிமைகள் குறித்த சில பிரச்சினைகள் இருப்பதாக ஒப்புக்கொண்ட விழாவின் ஏற்பாட்டாளரும், எழுத்தாள ருமான ஷியாம் செல்வது ரை, ஒரு இலக்கிய விழாவை நிறுத்துவது அதற்கான பதிலாகாது என்று கூறினார். (ச-5)




**சுகமளிக்கும் விடுதலையின் ஆராதனை**

தீராத வியாதி, அசுத்த ஆவியின் கட்டு, பில்லி சூனியம், வைத்தியர்களால் கைவிடப்பட்ட நிலையா? தனிப்பட்ட பிரச்சினையா? எல்லாவற்றிலுமிருந்து விடுதலை பெற

**பிரதி சனிக்கிழமை தோறும் காலை 10மணியிலிருந்து 12மணி வரை**

கெத்செமனே கொஸ்பல் சர்ச்
15A, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 0779773300, 0213207496
(3589)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலைப்பீடம்**

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் (MRTC)**
**இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டாண்டு)**
**மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்**

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமா (முழுநேரம்- இரண்டு ஆண்டு) பயிற்சியில் இணைந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் ரூ 22,500.00, புலமைப்பரிசில் தொகையாக வழங்கப்படும்.

இதழியல் டிப்ளோமா (முழு நேரம்- இரண்டாண்டு) கற்கைநெறிக்கு புதிதாக இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியுடையவர்கள் டிப்ளோமா கற்கைநெறிக்கும், புலமைப்பரிசிலுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 06.02.2011**

விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் கீழ்வரும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



இல.84, ஜும்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 021 222 9873

பதிவாளர்
27.01.2011
(சி-2305)

# இன்று ஒரு தகவல்

## சிந்தித்துச் செயற்படு

வளமான மரங்கள் நிறைந்த காட்டில் ஒரு நரி இருந்தது. அந்தக் காட்டுக்குப் பக்கத்திலுள்ள ஊரில் ஒரு பெரிய வீடு இருந்தது.

அந்த வீட்டில் ஒரு பூனையை வளர்த்தார்கள். அந்தப்பூனை அடிக்கடி இந்தக் காட்டுக்கு வருவதுண்டு. வந்து நரியிடம் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருக்கும். பொழுது சாய்ந்ததும் வீட்டுக்குப் போய்விடும்.

அந்த நரியும் பூனையும் நண்பர்களாயின. ஒரு நாள் நரி அந்த பூனையிடம் 'நண்பா நானும் இன்றைக்கு உன்னுடன் வந்து உங்கள் வீட்டில் ஒருநாள் தங்கியிருந்து விட்டு வரலாம் என்று பார்க்கிறேன்'' என்றது.

"ஐயோ அங்கே வராதே என்றது பூனை"

'ஏன்?' என்று கேட்டது நரி.

"நீ எங்களுடைய வீட்டுக்கு வந்தால் வீட்டுக்காரர்கள் உன்னை அடித்து விரட்டிவிடுவார்கள். அதனால் வேண்டாம்'' என்றது. இதைக் கேட்டதும் நரி சொல்லியது:

இதோ பார் மனிதர்களுக்கு இரண்டு கால். நமக்கு அப்படியில்லை நமக்கு நாலுகால். நாலுகால் உள்ள நாம இரண்டு கால் உள்ள மனிதர்களுக்குப் பயப்படலாமா? அதுவுமில்லாமல்...

அவர்கள் இந்த நேரம் தூங்கியிருப்பார்கள். நாம போறது அவர்களுக்கு தெரியாது. அதனால் தைரியமாக என்னைக் கூட்டிக் கொண்டு போ. பயப்படாதே என்றது.

பூனை எவ்வளவோ சொல்லிப் பார்த்தது.

நரி கேட்கவில்லை. வேறு வழியில்லாமல் அதை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனது. மெதுவாக மாடிப்படியேறி மொட்டை மாடிக்குப் போனது.

அங்கே போய் சேர்ந்ததும் பூனைக்கு மிக்க மகிழ்ச்சி. யாருக்கும் தெரியாமல் வந்து சேர்ந்துவிட்டோம் என்று உற்சாகம் வந்துவிட்டது. அதனால் மியாவ்... மியாவ் என்று கத்த ஆரம்பித்தது. நரி பார்த்தது நாம மட்டும் ஏன் சும்மா இருக்க வேண்டும் என்று அதுவும் கத்த ஆரம்பித்தது.

நரி ஊளையிடுவதைக் கேட்டதும் மக்கள் விழித்து கொண்டார்கள். எல்லோரும் தடியை எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள். அந்த நரியைப் போட்டு சாத்து சாத்தென்று சாத்திவிட்டார்கள்.

அடிவாங்கிய நரி மெதுவாக தப்பிப்பிழைத்து காட்டுக்கு ஓடிப் போய்ச் சேர்ந்தது. உடம்பு முழுவதும் காயம்.

காட்டிலிருந்த மற்ற நரிகளெல்லாம் ஓடிவந்து சுற்றி நின்று கொண்டு கேள்வி கேட்க ஆரம்பித்ததாம்.

'கூடா நட்பு கூடவா சொன்னோம்.?' என்றதாம்.

உடனே இது 'ஏன் கூடினா என்ன?' என்றதாம்.

"கூடங்கள் மாடங்கள் ஏறவா சொன்னோம்?'' என்று மற்ற நரியெல்லாம் கேட்டதாம். ஏன் ஏறினால் என்ன என்றதாம் இது.

உடனே மற்ற நரிகள் இதோ பார்... கூடாத கூட்டு கூடக் கூடாது.

கூடினது போதாதென்று கூடங்கள் மாடங்கள் வேறு ஏறியிருக்கிறாய். அதோடு விடாமல், பாட்டு வேற பாடியிருக்கிறாய். நாங்கள் நாதங்கள், கீதங்கள் பாடவா சொன்னோம்? என்று கேட்டதாம். உடனே அடிபட்ட நரி ரோஷமாக ... பாடினால் என்ன? என்றதாம்?

நீ பாடியதால் தான் மேளதாளங்களை உன் மேலேயே வாசித்திருக்கிறார்கள் என்று எல்லா நரிகளும் சேர்ந்து சொல்லியதாம். இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும் அதுதான் நமக்கு மரியாதை. அதைப்புரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக்கதை.

இதை அழகாக ஒரு நாட்டுப்புறப்பாடலில் சொல்லியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். அந்தப்பாட்டு என்ன தெரியுமா?

**கூடாத வங்களிடம்**
**கூடவா சொன்னோம்?**
**கூடினால் என்ன?**

**கூடங்கள் மாடங்கள்**
**ஏறவா சொன்னோம்?**
**ஏறினால் என்ன?**

**நாதங்கள் கீதங்கள்**
**பாடவா சொன்னோம்?**
**பாடினால் என்ன?**

**பாடினதி னாலே**
**தாளங்கள் மேளங்கள்**
**தக்கத்திம்மென விழுந்தனவே**

அதனால் இந்த உலகத்தில் நாம் எதைச் செய்தாலும் யோசித்துச் செய்ய வேண்டும் அதுமுக்கியம்.

ஒருத்தருக்கு நீச்சல் குளத்தில் குதித்து விளையாட வேண்டும் என்று ஆசை. உடனே ஒரு நீச்சல் குளத்தைத் தேடிப் போனார். திரும்பி வரும்போது உடம்பு முழுவதும் கட்டுப் போட்டுக் கொண்டு வந்தார்.

என்னங்க இது என்று கேட்டார் வீட்டுக்கார அம்மா.

"முன் யோசனை இல்லாமல் அந்த குளத்தில் போய் நீச்சலடித்துவிட்டேன்'' என்றார்.

"என்ன ஆச்சு? என்றார்.

"நீச்சலடிப்பதற்கு பின்னர்தான் தெரிந்தது அந்த குளத்தில் தண்ணீர் இல்லையென்று'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மீண்டும் மழை

(கொழும்பு)

வளிமண்டலத்தில் திடீரென ஏற்பட்டிருக்கும் மாற்றம் காரணமாக மப்பும் மந்தாரத்துடனும் கூடிய மழைக் காலநிலை மீண்டும் ஏற்பட்டிருப்பதாக வானிலை அவதான நிலையத்தின் வானிலையாளர் தமயந்தி இந்தி ஹெட்டிஹேவகே நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் முடிவுற்ற 24 மணிநேர மழை வீழ்ச்சிப் பதிவுப்படி ஆகக் கூடிய மழை வீழ்ச்சி மஹியங்கனையில் 101.7 மில்லி மீற்றர் ஆகப் பதிவாகியுள்ளது என அவர் கூறினார்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் கனத்த மழை பெய்ததாகவும் குறிப்பிடபடுகிறது.

வானிலையாளர் மேலும் கூறுகையில் வளிமண்டலத்தில் திடீரென அமுக்க நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே மப்பும் மந்தாரத்துடன் கூடிய மழை காலநிலை உருவாகியுள்ளது.

இதன் விளைவாக கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இரண்டொரு தினங்களுக்கு இடையிடையே மழை பெய்யும்.

அதேநேரம் மேல் சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் பிற்பகலிலோ, மாலையிலோ இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யும்.

அதனால் இடி மின்னல் பாதிப்புக்களிலிருந்து தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதேவேளை கிழக்கு, தென்கிழக்கு மற்றும் மன்னார் குடா ஆகிய கடற்பரப்புகள் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் முடிவுற்ற 24 மணி நேரத்தில் அம்பாறையில் 68.5 மில்லி மீற்றரும் மட்டக்களப்பில் 22.5 மில்லி மீற்றரும் மழை பெய்துள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# சட்டமாணி நுழைவுத் தேர்வுக்கான கருத்தரங்குகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் திறந்த பல்கலைக்கழகத்தால் சட்டமாணி நுழைவுத் தேர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படவுள்ளது.

இந்நுழைவுத் தேர்தலில் தோற்றவுள்ள மாணவர்களை உரிய முறையில் தயார்படுத்துவதற்கு திறந்த பல்கலைக்கழக சட்டப்பீட விடுகை ஆண்டு மாணவர்களினால் கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளது. இதில் நாளை சனிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியிலும் (ஆரம்ப பாடசாலையில்) மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் கருத்தரங்குகள் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம் பெறவுள்ளது.

இக் கருத்தரங்கானது பொது உளச்சார்பு, நுண்ணறிவு ஆங்கிலம் ஆகிய பாட விதானங்களை உள்ளடக்கிய வகையில் நடாத்தப்படவுள்ளது.

சட்டமாணிக் கற்கைக்கான நுழைவுத் தேர்வில் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு திறந்த பல்கலைக்கழக சட்டபீட இறுதி ஆண்டின் பிரதி நிதி விநாயகமூர்த்தி இளங்குமார் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 230 |
| உருளைக்கிழங்கு | 55 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 300 |
| தக்காளி | 90 | 90 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 55 |
| கோவா | 100 | 120 | 100 |
| கரட் | 100-110 | 140 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 80-90 | 120 | 110 |
| வாழைக்காய் | 35-90 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 250-260 | 200-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 90 |
| பாகற்காய் | 140 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 90 |
| கருணைக் கிழங்கு | 40 | 80 | 50 |
| பயற்றங்காய் | 180-200 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 |
| பீற்றூட் | - | 150 | 140 |
| கறிமிளகாய் | - | 300 | 280 |
| முருங்கைக்காய் | - | - | - |
| போஞ்சி | 140 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 10-20 | 30 | 40 |
| தேசிக்காய் | 40-50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 60 | 50 |

# இராசி பலன்

*28.01.2011*
*(தை 14, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*நவமி முற்பகல் 9.00 மணிவரை*
*விசாகம் முற்பகல் 11.43 மணிவரை*
*இராகுகாலம் 11.06-12.36 மணிவரை*
*சுப நேரம் 6.36-8.06 மணிவரை*

**மேடம்** கணபதி வழிபாட்டில் இன்பம் காணவேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது.

**இடபம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், பிரிந்தவர் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு, நம்பி வந்தவர்களுக்கு கை கொடுத்து உதவுவீர்கள்.

**மிதுனம்** உற்சாகமாகப் பணிபுரியும் நாள், வருமானம் உழைப்பதற்கான வழியைத்தேடுவீர்கள், சுவாரஸ்யமான நாள், அடுத்தவர் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடையும் நாள், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம், சுப செய்தி வந்து சேரலாம், பிரயாண சுகமுண்டு, வீட்டுப் பொருட்கள் வாங்குவதில் அக்கறை எடுப்பீர்கள்.

**கன்னி** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், நீண்ட நாளைய பிரச்சனை ஒன்று நல்ல முடிவுக்குவரலாம், சந்தேகப்பட்ட காரிய மொன்று நல்லபடியாக அமையும்.

**துலாம்** தொழில் வளர்ச்சிக்கு வித்திடுவீர்கள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் கொள்வீர்கள், பெருமையடைய வேண்டிய நாள், வாய்ப்புக்கள் தேடிவரும்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தெய்வசிந்தை மேலோங்கும், உறவினர் வருகையுண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



**தனுசு** உற்றார், உறவினர்களுக்காக ஒரு சிறு தொகையை செலவு செய்ய நேரிடலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணவேண்டியநாள்.


**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், வருங்கால நலன் கருதி சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**கும்பம்** யோகமான நாள், நண்பர்களின் ஆதரவால் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்திதரும், புதிய திட்டங்களைத் தீட்டி மகிழ்வீர்கள்.

**மீனம்** மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், தடைப்பட்ட காரியங்கள் இன்று நிறைவேறும்.

வளவன்



யாழ்.மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் அசம்பாவிதங்கள், மக்களின் மீள்குடியேற்றம், அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.(படங்கள்:- எஸ்.கரன்)

## தென்மராட்சி பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் தினவிழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் தினவிழா நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ் துறைத்தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இவ்விழாவில் 2010 ஆம் ஆண்டில் தேசிய மற்றும் மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற தென்மராட்சி பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

எனவே அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரை கலந்து சிறப்பிக்குமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2-29)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திலுள்ள கர்ப்பிணி ஆசிரியர்களுக்கான போசாக்குத் தொடர்பான செயலமர்வு முன்பு அறிவித்ததன் படி இன்று வெள்ளிக்கிழமை மதியம் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இச்செயலமர்விற்கு உரியவர்கள் தவறாது பங்குபற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## இரு வெவ்வேறு விபத்து சம்பவங்களில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

கரவெட்டி பகுதியில் இரு வெவ்வேறு விபத்து சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் நடைபெற்ற சம்பவத்தில் எதிர் எதிரே வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த மோகன் சுதர்சன் (வயது 22) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் அவ்வி த்திலேயே மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளார். அப்பகுதி பொதுமக்கள் அதனைமீட்டு நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 4 மணிக்கு நெல்லியடி எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் இருமோட்டார் சைக்கிள்கள் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் கரணவாய் கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி ஜெகன் (வயது 26) என்ற இளைஞனே படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஸ்ரீ-2-24)

யாழ்.செய்திகள்

## மின்சாரம் தடைப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியம்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தின் சில பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தின் கரவெட்டி, மாலுசந்தி, அல்வாய் கிழக்கு பகுதிக்ளில் தொடர்ந்தும் மின்சார விநியோகம் தடைப்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மின்சார விநியோகம் தடைப்படுவதால் அப்பகுதியிலுள்ள அரச அலுவலகங்கள், பொதுநிறுவனங்கள் சிரமங்களை எதிர்கொள்வதோடு வர்த்தக நிலையங்கள் பல நெருக்கடிகளுக்கு உட்படுவதாகவும் இது தொடர்பாக நெல்லியடி மின்சாரசபையின் கவனத்துக்கு கொண்டு சென்றபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து மக்களுக்கு சீரான மின்சாரத்தை விநியோகித்து சிரமங்களை தவிர்க்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஸ்ரீ-24)

## மெய்வன்மைப் போட்டிகள்

(அல்வாய்)

கெருடாவில் இந்துதமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் து.அருந்தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் ச.மாணிக்க தியாகராஜா , சிறப்பு விருந்தினராக கனடா வாழ் கெருடாவில் மக்கள் ஒன்றியப் பொறுப்பாளர் கு.பொன்நேசகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலய திறந்த பாடசாலைகளின் சிரேஷ்ட போதனாசிரியரும் சமாதான நீதவானுமான கொ. குணசிங்கம், உடுப்பிட்டி அ.மி.த.க ஆசிரியை திருமதி மேகலாதேவி இரத்தினராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஸ்ரீ-19)

◆◆◆◆◆◆◆◆◆

(அல்வாய்)

கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பொலிகண்டி பாரதி விளையாட்டு கழக மைதானத்தில் பாடசாலை அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் பா.வெற்றிவேல் கலந்து கொள்ளவுள்ளார். வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கான பரிசில்களை திருமதி.ரதி வெற்றிவேல் வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

(ஸ்ரீ-19)

(பொலிகண்டி)

சமரபாகு நியூட்டன் விளையாட்டு கழகத்தால் நடத்தப்படும் மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி சமரபாகு நியூட்டன் விளையாட்டரங்கில் நடைபெறும்.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் மாலை 2 மணிக்கு சமரபாகு நியூட்டன் கழக வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து ஏனைய கழக வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுமென்று சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர்களை சமரபாகு சனசமூக நிலையத்தில் பதிவு செய்யுமாறு கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-48)

◆◆◆◆◆◆◆◆◆

(அல்வாய்)

வல்லை மகளிர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி. தேவராணி நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய வடபிராந்திய இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் ந.சீவரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

பரிசில்களை திருமதி நளினி சீவரத்தினம் வழங்கி கௌரவிக்கவுள்ளார்.(ஸ்ரீ-19)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

புற்றளை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் மு.அனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளைத் தலைவர் த.சிவகுருநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வுக்கான அனுசரணையை யாழ்.வைத்தியசாலை உரிமையாளர் சி.குலேந்திரராஜா வழங்கவுள்ளார். (ஸ்ரீ-19)

## பொதுக்கூட்டம்

(பொலிகண்டி)

இமையாணன் மேற்கு உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தின் இவ்வாண்டுக்கான பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை மாலை 3 மணிக்கு இமையாணன் மாணவர் மன்றத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் வரவு- செலவு அறிக்கை சமர்ப்பித்தலும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறுமென சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2-48)

◆◆◆◆◆◆◆◆◆

(அல்வாய்)

வல்லை மகளிர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அதிபர் திருமதி. தேவராணி நவரத்தினம் தலைமையில நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நடப்பாண்டுக்குரிய நிர்வாக குழு தெரிவு நடைபெறும். (ஸ்ரீ-19)

(பொலிகண்டி)

பத்திரகாளி அம்மன், பொலிகைக் கந்தன் ஆகிய இரு சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு பொலிகண்டி அம்பிகை முன்பள்ளியில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சமுர்த்திப் பயனாளிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராம சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி உதயநிலா சுதாகரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2-48)

◆◆◆◆◆◆◆◆◆

(கரவெட்டி)

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் இவ்வாண்டுக்கான பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மண்டபத்தில் எஸ்.செல்வதீபன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு கழக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2-24)

# இரு அரசியல் குழுக்களுக்கு இடையில் மோதல் சம்பவம்

## துப்பாக்கிச்சூட்டில் இருவர் காயம்

(கொழும்பு)

கஹவத்தை எந்தன பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் இரு குழுக்களுக்கிடையில் நேற்று காலை மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதுடன் இவர்களுக்கிடையில் பரஸ்பரப் துப்பாக்கி பிரயோகமும் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

இதில் இருவர் காயமடைந்த நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

மின்சக்தி மற்றும் மின் வலு பிரதி அமைச்சரான பிரேமலால் ஜயசேகரவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குழுவினருக்கும் சுயேட்சையாக போட்டியிடும் ஒரு குழுவினருக்கும் இடையில் இந்த மோதல் ஏற்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஒரு இடத்தில் சோடினைகளை மேற்கொண்ட போது மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலின் போது அமைச்சருக்கு சொந்தமான இரு வாகனங்கள் சேதமாக்கப் பட்டுள்ளன. இது தொடர்பில் இரு குழுவினரும் கஹவத்தை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஒவ்வொரு குழுவும் மற்றக்குழு முதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டியதாக பொலிஸார் கூறினார். (ஸ்ரீ)

# நாவற்குழி நெற்களஞ்சியசாலைக்கு அமைச்சர், ஆளுநர் விஜயம்

(யாழ்ப்பாணம்)



வட மாகாண நெல் சந்தைப்படுத்தும் உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு ஆளுநர் பணிமனையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து நாவற்குழி பிரதேசத்தில் உள்ள நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியசாலைக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் நெல் சந்தைப்படுத்தும் குழுவினர் ஆகியோர் விஜயம் மேற்கொண்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் காலங்களில் அறுவடையாகும் நெல்லை கொள்வனவு செய்து அதனை களஞ்சியப்படுத்துவது தொடர்பான ஏற்பாடுகளை செய்ய ஆராய்ந்தனர். (ஸ்ரீ-2)

# அநுராதபுரம் சிறைச்சாலையில் கூரைமீதேறி போராட்டம்

(கொழும்பு)

வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்க்கும் மேற்பட்ட கைதிகள் நேற்று முன்தினம் சிறைச்சாலை கூரையில் அமர்ந்து எதிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சில கைதிகள் வெள்ளைக்கொடிகளையும் பௌத்த கொடிகளையும் பதாகைகளையும் ஏந்தியவாறு கோஷமிட்டனர். இதனால் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் பதற்றநிலை ஏற்பட்டது. கடந்த 24ஆம் திகதி சிறைச்சாலை கைதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து அங்கு சென்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைசச்ர் சந்திரசிறி கஜதீர, சிறைச்சாலை ஆணையாளர் வீ.ஆர்.டி. சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் கைதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் வழங்கிய உறுதிமொழிகளின்படி கோரிக்கைகளை நிறைவேற்றாததற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்ப்பதற்காகச் சென்ற உறவினர்களுக்கு அதிகாரிகள் அனுமதி வழங்காததால் கைதிகளின் உறவினர்கள் நேற்று முன்தினம் மதியம் சிறைச்சாலையின் பிரதான நுழைவாயில் அமைந்திருக்கும் அநுராதபுரம், குருநாகல் பிரதான வீதியின் குறுக்கே அமர்ந்து எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்பில் ஈடுபட்டவர்களை விலக்குவதற்கு பொலிஸார் கடும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. கைதிகளின் உறவினர்கள் வீதியில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. இந்த நிலையில் தமது உறவினர்களைக் காண அனு மதிக்கும் வரை தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனத் தெரிவித்த உற வினர்கள் சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஸ்ரீ-2)

# வடமராட்சி கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒரு தொகுதி தகரம் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி நேற்று முன்தினம் கையளித்துள்ளார். வடமாகாண ஆளுநரின் யாழ். செயலகத்தில் மேற்குறிப்பிட்ட பொருட்கள் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 5ஆயிரம் கூரைத்தகடுகளும் 26 துவிச்சக்கர வண்டிகளும் ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையின் பிரகாரம் ஆளு நரால் இவை வழங்கப்பட்டுள்ளன.

இக் கையளிப்பு நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

இதேவேளை இத் துவிச்சக்கர வண்டிகள் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 26 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு ஆளுநரின் அலுவலகத்தில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரல் கையளிக்கப்பட்டன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 20ஆம் திகதி வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு சென்றிருந்த போது அங்குள்ள முன்பள்ளி ஆசிரியைகள் தங்களது பிரயாண வசதி கருதி தங்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் தேவையென அவரிடம் கோரிக்கை விடுத்தமைக்கு அமைவாகவே நேற்று முன்தினம் இத் துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# ஆன்மீக விடுதலைக்கான பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஆன்மீக விடுதலைக்கான பிரார்த்தனைத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மாலை 4.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

உங்கள் துக்கங்கள் சந்தோசமாக மாற இந்தப் பிரார்த்தனைக்கு வருகை தந்து ஆசீர்வாதம் பெற்றுச் செல்லுமாறு பிரார்த்தனை ஏற்பாட்டாளர் டாக்டர் பாலதினகரன் மற்றும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2-6)


union assurance
Trust in your tomorrow, today.

வேலைவாய்ப்பு

Join us as an Insurance Adviser
to experience what you hoped for...

රක්ෂණ උපදේශකයෙකු ලෙස අප හා අත්වැල් බැඳගන්නා ඔබගේ
සිහිනයන් නිසැකවම අපි සැබෑ කරන්නෙමු..

உங்கள் நம்பிக்கைக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள
காப்புறுதி ஆலோசகராக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.




இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு) இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
பதவி - 4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
பதவி-1
பதவி - 2 ← தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள் :-

- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்.
- திடசித்தம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- செவ்வாய்க்கிழமை - 01.02.2011
நேரம் :- மு.ப 9.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்,
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இ.கிருபாகரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.பே: 0774115290

(சி-1563)

# வடக்கில் வன்முறைகளை கட்டுப்படுத்த படையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## யாழ்.ஆயர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வர படைத்தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ்ப்பாண பேராயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் படைத் தரப்பினருக்கும், சிவில் அமைப்புக்களுக்கும், மதத் தலைவர்களுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட பேராயர் வடக்கு படையதிகாரிகளிடம் குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகவும், இதனால் மக்கள் பீதியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுமார் 50 ஆயிரம் படையினர் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என யாழ்ப்பாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

படைத்தரப்பினரைத் தவிர்ந்த ஏனையவர்கள் ஆயுதம் ஏந்துவதனை கட்டுப்படுத்த அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் படைத்தரப்பினர் சமூக விரோத செயல்களில் ஈடுபடவில்லை எனவும் சில தரப்பினர் படையினருக்கு களங்கம் ஏற்படுத்தும் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு உச்சபட்ச தண்டனை வழங்குவதற்குத் தயங்கப் போவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மின் தடை பற்றிய அறிவித்தல்

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவப் பீடப் பிரதேசம், திருநெல்வேலி பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதி ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5மணிவரை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங்கப்படலாம் என இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# மதுப்பிரியர்களின் அட்டகாசத்தால் இடர்பாடுகளை எதிர்நோக்கும் மக்கள்

(கொழும்புத்துறை)

நல்லூர் கொண்டலடி ஞானவைரவர் ஆலயப்பகுதிகளில் உள்ள வீதிகளில் இளைஞர்கள் மதுபோதையில் நாளுக்கு நாள் அட்டகாசம் புரிந்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீதியால் பயணம் செய்யமுடியாதவிற்கு மதுப்பிரியர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கல்வியங்காட்டு மதுபான சாலையில் இருந்து மேற்படி பகுதிக்கு மதுபானங்களை வாங்கிவரும் இளைஞர் குழுவினர் போதல்களுடன் வீதிகளில் நின்று வெளிப்படையாகக் குடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அப்பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4-51)

# குச்சவெளி நிலவெடிப்பு தொடர்பான அறிக்கை விரைவில் கையளிப்பு

(கொழும்பு)

திருகோணமலை குச்சவெளி சலப்பை ஆறுகளப்புக்கு அருகில் ஏற்பட்ட அசாதாரண புவிமாற்றம் தொடர்பான அறிக்கை இவ்வாரத்தில் சுற்றாடல் அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.


கொழும்பில் இருந்து சென்ற ஆய்வாளர் குழு, ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

அந்த ஆய்வுகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் பகுதியில் மழை காரணமாக தொடர்ந்தும் சேறு நிறைந்துள்ளதாக புவி அகழ்வாராய்ச்சி மத்திய பணியகத்தின் தலைவர் எம்.பி விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கண்டி சொர்ணமாலி பெண்கள் பாடசாலைக்கு அருகில் உள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட புவியதிர்வு தொடர்பாக தேசிய கட்ட ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர். (ஸ்ரீ)

# பிரபல பரசூட் வீரரின் பரிதாப மரணம்



5 ஆயிரம் அடி உயரத்திலிருந்து குதித்த பரசூட் வீரர் மலையில் மோதி பரிதாபகரமாக மரணத்தைத் தழுவினார்.

28 வயதான அமெரிக்காவைச் சேர்ந்த ஜெரிஹார்போஸ்ட் என்ற பரசூட் வீரருக்கே இந்தக் கதி ஏற்பட்டது.

இவரின் தலை மலையொன்றுடன் மோதி பின்னர் அவர் மரத்தில் மோதி கீழேவிழுந்தார். உயரமான இடங்களில் இருந்து பரசூட் மூலம் குதிப்பது மற்றும் அவ்வாறு குதிப்பதைப் படம் பிடிப்பது என்பவற்றில் இவர் கைதேர்ந்த நிபுணர்.

இது தொடர்பாக ஏனையவர்களுக்கு பயிற்சியும் அளிப்பவர்.

இவர் சுவிற்சர்லாந்துக்கு விஜயம் செய்திருந்த போது ஏல்ப்ஸ் மலைத்தொடரில் உள்ள லோபர்றூனன் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் உயரமான ஒரு இடத்திலிருந்து பாய்ந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

சம்பவம் இடம்பெற்றபோது இவர் அணிந்திருந்த பரசூட் விரிந்திருந்த போதிலும், ஜெரிஹார்போட் கட்டுப்பாட்டை இழந்தவராகக் காணப்பட்டதால் அது அவரைக் காப்பாற்றத் தவறிவிட்டது என்று நேரில் கண்டசிலர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# இலங்கையில் மற்றுமொரு வெந்நீருற்று கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கைப் பிரதேசத்தில் புதிதாக வெந்நீரூற்றுக் கிணறொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை காலமும் திருமலையின் கன்னியா பிரதேசம் மட்டுமே வெந்நீரூற்றுக் கிணறுகளை கொண்டிருந்த பிரதேசமாகும்.

ஆயினும் தற்போது அதற்குப் போட்டியாக தென்னிலங்கையிலும் ஒரு வெந்நீரூற்றுக் கிணறு முளைத்துள்ளது.

குறித்த வெந்நீரூற்றானது ஓவதென்ன நீர்த்தேக்கத்தின் அருகே மேலதிக நீர் வழிந்து செல்லும் பகுதியில் தோன்றியுள்ளது. அதிலிருந்து கன்னியா போன்றே வெந்நீர் பீறிட்டு வழிவதாகத் தெரிய வருகின்றது.

ஆயினும் அது தற்காலிகமானதா ? இல்லை தொடர்ந்தும் வெந்நீரூற்றாக இருக்குமா என்பது குறித்த ஆய்வுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (ஸ்ரீ)

# உள்ளூராட்சி மன்றங்களை மீளமைக்கும் வேலைத் திட்டம் அமுலாக்கப்படவுள்ளது

## உள்ளூராட்சி மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகளை செயற்திறன் வாய்ந்ததாக மாற்றும் நோக்கில் அந்த மன்றங்களைப் மீளமைக்கும் வேலைத்திட்டம் அமுலாக்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் கலாநிதி நிகால் ஜெயதிலக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மக்கள் தமது பிரச்சினைகளை நேரடியாக சமர்ப்பிக்க இது வழிவகுக்கும் எனவும் அலுவலக சேவை மற்றும் பல்வேறு பணிகளை அகற்றுவதற்கு புறம்பான அலுவலகங்களும் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் 301 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் புதிதாக அமைக்கப்பட்ட மாநகர சபைகளும் இதற்குள் அடங்குவதாகத் தெரிவித்தார். கடுவலை, பண்டாரவெல, அக்கரைப்பற்று, தம்புள்ள ஆகிய மாநகரசபைகள் புதிதாக நிர்வகிக்கப்பட்ட சபைகளாகும்.

விசேட காரணங்களுக்காக 34 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளன. எதிர்வரும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் சுற்று தொடர் போட்டிகள், கிழக்கு மாகாணத்தில் சமீபத்தில் இடம்பெற்ற தேர்தல்கள் போன்றவற்றின் காரணமாக இவற்றை பின்னர் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (ஸ்ரீ-4-9)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

### இராணுவத் தலைமையகம் இடமாற்றம்

கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக பத்தரமுல்லைக்கு இடமாற்றுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

காலிமுகத்திடல் பிரதேசத்தில் 1000 மில்லியன் டொலருக்கான இரண்டு வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யவுள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

### வெளிநாடு செல்லும் பெண்களுக்கு வயதுக் கட்டுப்பாடு

வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் செல்கின்றவர்களின் குறைந்தபட்ச வயது எல்லையை 18 இல் இருந்து 21 வருடமாக அதிகரிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இதற்கான பிரேரணையை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா முன்வைத்திருந்தார்.

### கிராம மின்விநியோகத் திட்டம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு ஏற்ப 53.49 மில்லியன் அமெரிக்க டொலர் சுவீடன் நிதி உதவியுடன் வட மத்திய மாகாணத்தில் 550 கிராம மின் விநியோகத் திட்டங்களை ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இத்திட்டத்தின் மூலம் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் வீடுகளுக்கும் 10ஆயிரம் சிறிய அளவிலான கைத்தொழில் நிறுவனங்களுக்கும் மின்விநியோகம் வழங்க எதிர் பார்க்கப்படுகின்றது.

### வடக்கில் சுகாதார மத்திய நிலையங்கள் புனரமைப்பு

வடமாகாணத்தில் உள்ள சுகாதார மத்திய நிலையங்களை 150 மில்லியன் ரூபா ஜப்பான் நிதி உதவியில் புனரமைக்க அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் - மன்னார்-வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் அமுலடுத்தப்படும். இதற்கான பிரேரணையை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்திருந்தார்.


### தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி

குவைத் அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்திப் பணிகள் 10.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# புலிகள் மேற்குலகுடன் இணைகின்றனர்

# ஆதங்கப்பட்ட அமைச்சர் பீரிஸ்

## உள்ளூராட்சித் தேர்தல் வெற்றி யார் பக்கம்


பேராசிரியர் பீரிஸ்

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறப் போகின்ற உள்ளூராட்சித் தேர்தல் இப்போது கவனிப்பு மிக்க ஒன்றாக மாறியுள்ளது.

கிட்டத்தட்ட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இந்தத் தேர்தல் நடக்கப்போகிறது. 'மினி' பொதுத் தேர்தல் என்று சொல்லும் அளவுக்கு இது கவனிப்புக்குரியதாக உள்ளது.

பொதுத்தேர்தல் நடந்து இன்னமும் ஒரு வருடம் கூடக் கழியாதுள்ள நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் மிகப் பெரிய மாற்றங்கள் வந்துவிடப் போகிறதா என்று எண்ணுகிற பலரும் உள்ளனர்.

கடைசியாகக் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை விடவும் கொஞ்சம் குறைவான ஆசனங்களையே ஆளுங்கட்சி வென்றது. பின்னர் ஆட்களை இழுத்துப் பிடித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் பெற்றுக் கொண்டது.

இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் பெரியளவிலான மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. ஆனால் பொதுத்தேர்தல், ஜனாதிபதித்தேர்தல், மாகாணசபைத்தேர்தல் ஆகியவற்றை விடவும் இதற்கு வேறொரு பரிமாணம் உள்ளது.

இதில் போட்டியிடும் வேட்பாளர்கள் உள்ளூரில் மதிப்பு மிக்கவராக இருக்கவேண்டும். அல்லது அறிமுகமானவராகவேனும் இருக்க வேண்டும்.

அத்தகைய வேட்பாளர்களின் தெரிவே இந்தத் தேர்தலில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். ஒரு இடத்தில் யார் அதிகளவு குடும்ப உறவுகளை, சுற்றத்தாரை, உறவினரை, நண்பர்களை கொண்டிருக்கிறாரோ அவருக்கு ஆதரவு கிடைக்கும் வாய்ப்புக்கள் அதிகம் குறிப்பாக சமூகத்தில் அடுத்தவருடன் முரண்படாத பண்புள்ளவர்கள் இந்த தேர்தலில் வெற்றி பெறுவது சுலபம்.

இதற்கு அடுத்த நிலையில் தான் கட்சி ரீதியான செல்வாக்கின் தாக்கம் இருக்கும். எனவே இந்தத் தேர்தல் முடிபுகள் பொதுத்தேர்தலின் முடிபைப் போல அமையும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதைவிட கடந்த ஒரு வருடத்திற்குள் நாட்டில் நிறையவே மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. இந்த மாற்றங்கள் ஆளும் கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாக உள்ளனவேயன்றி சாதகமானவையாக இல்லை என்பது வெளிப்படை. குறிப்பாக விலை வாசி உயர்வு இதில் முக்கியமானது.

வெங்காயத்தின் விலை சில இடங்களில் 320 ரூபாய் வரை கூடப் போனது. தேங்காயின் விலை 100 ரூபா வரை விற்றது. மிளகாய் இப்போதும் 700 ரூபாவரை விலைபோகிறது. இப்படியொரு நிலை இதற்கு முன்னர் ஏற்பட்டதில்லை.

யாழ்ப்பாணத்தில் முன்னர் வெங்காயம் 250ரூபாய் வரை விற்றதும் உருளைக்கிழங்கு 700 ரூபாய் வரை போனதும், இஞ்சி 2500 ரூபாவிற்கு விற்றதும், தேங்காய் ஒன்று 120 ரூபாவிற்கு விற்பனையானதும், அரிசி விலை 150 வரை இருந்ததும் பெரிய விவகாரமேயில்லை.

அது போர்க் காலம்-விநியோகங்கள் தடைப்பட்டிருந்த நேரங்களில் இத்தகைய விலை உயர்வுகளை அங்குள்ள மக்கள் சந்திக்கவும்- சகித்துக்கொள்ளவும் நேரிட்டது. அது போலவே வன்னியில் உள்ள மக்களுக்கும்.

ஏனைய பகுதிகளில் உள்ள மக்களுக்கு இப்போது தான் அது எந்தளவுக்கு பாரதூரமானது என்று புரிந்து கொள்ளக் கூடியதொன்றாக உள்ளது. போர் இல்லாத அமைதியான சூழலில்-நாடுமுழுவதுமே விலைவாசி உயர்வினால் திண்டாடுகின்றது. விலை அதிகரிப்பு, தட்டுப்பாட்டினால் தேங்காயை இந்தியாவில் இருந்து தருவிக்க நேரிட்டது. வெங்காயம் பாகிஸ்தானில் இருந்து வந்தது. ஆனாலும் இந்தப் பிரச்சினை தீரவில்லை. அதற்குள்ளாகவே வந்து சேர்ந்தது இன்னொரு பிரச்சினை.

இரண்டு வாரங்களுக்கு மேலாக கொட்டித்தீர்த்த மழை நாட்டின் பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைத்துவிட்டது. பல இலட்சம் மக்களை இடம்பெயர வைத்த ஒரு தேசியப் பேரழிவு அது. அத்தோடு போகவில்லை இந்த வருட பெரும்போக அறுவடையில் சுமார் 20 வீதம் அழிந்து போய்விட்டது. பல இலட்சக்கணக்கான மக்கள் தொழில்களை இழந்தும் இடம்பெயர்ந்தும், விலைவாசி உயர்வினால் பொருட்களை வாங்கமுடியாமலும் திண்டாடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில்தான் இந்த மினி தேர்தல் நடக்கப்போகிறது.

இதற்கு முன்னர் தேர்தல் நடைபெற்ற காலங்களில் வடக்கு,கிழக்குப் பகுதி மக்கள் தான் இடம்பெயர்வு, பொருட்களின் விலையுயர்வு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இப்போது வடக்கு, கிழக்கையும் தாண்டிய


ரணில் விக்ரமசிங்க

அழிவுகளும் இழப்புக்களும் ஏற்பட்டுள்ள சூழலில் தேர்தல் நடக்கப்போகிறது.

இந்தநிலையானது மக்கள் முன் ஆதரவு கூறிச்செல்வது அரசாங்கத்திற்கு மிகவும் முக்கியமானதொரு பிரச்சினையாக இருக்கப்போகிறது. வாக்குக்கேட்கப்போனால் விலைகளைக் குறையுங்கள், நிவாரணம் தாருங்கள், நட்ட ஈடுதாருங்கள் என்று கேட்பார்கள். இதையெல்லாம் செய்வோம் என்று அரசாங்கத்தால் வாக்குறுதிகளைக் கொடுக்க முடியுமே தவிர நிறைவேற்ற முடியாது. இந்த நிலையில் அரசாங்கம் இந்தத் தேர்தலை சந்திப்பது ஒன்றும் சுலபமான காரியமாக இருக்கப் போவதில்லை.


மகிந்த ராஜபக்ஷ

2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் அரசாங்கத்திற்கு பெரிதும் கைகொடுத்தது புலிகளுக்கு எதிரான போர் மட்டும் தான்.

போரில் வெற்றி பெறுகிறோம்-வெற்றி பெற்றுவிட்டோம் என்று பிரசாரம் செய்து செய்தே அது தேர்தல்களில் வெற்றி பெற்றது.

யாருமே செய்யாத சாதனை நிகழ்த்தி விட்டதாக அரசாங்கம் கூறியது- அதை பெரும்பாலான மக்களும் ஏற்றுக் கொண்டனர். அதாவது புலிகளுக்கு எதிராகப் பெறப்பட்ட வெற்றியை முதலீடாகப் பயன்படுத்தி பெறப்பட்ட அரசியல் வெற்றியே அது. ஆனால் அந்த வெற்றியை வைத்துக் கொண்டு இந்த முறை தேர்தலில் வெற்றியைப் பெற்று விட முடியாது.

பழைய வெற்றிகளை சொல்லிச் சொல்லி எத்தனை காலத்திற்குத் தான் அரசியல் நடத்த முடியும்.

இப்போது பெரும்பாலான மக்கள் புலிகளுக்கு எதிரான போரில் பெறப்பட்ட வெற்றியை பெரிதாக மதிக்கும் நிலையில் இல்லை. அவர்களுக்கு இப்போது விலைவாசி உயர்வு, சம்பளப் பற்றாக்குறை என்று ஏகப்பட்ட பொருளாதார நெருக்கடிகள் கழுத்தை இறுக்குகின்றன. இவற்றில் இருந்து விடுபடுவதற்கான வழிகளையே மக்கள் தேடுகின்றனர்.

அதற்கு யார் வாக்குறுதிகளைப் கொடுப்பார்கள் என்று ஏங்குகின்றனர். இது தான் உண்மை நிலவரம். இந்தக் கட்டத்தில் அரசாங்கத்திற்கு ஒரு பலமான பிரசார ஆயுதம் தேவைப்படுகிறது. அது என்னவாக இருக்கும் என்பதை இப்போது ஓரளவுக்கு ஊகிக்கமுடிகிறது.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அநுராதபுரத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் துறைசார் வல்லுநர்கள் அமைப்பின் கூட்டத்தில் நிகழ்த்திய உரை ஊடகங்களில் பரபரப்பாக வெளியாகி இருந்தன.

புலிகள் மேற்குலகத்துடன் இணைந்து இலங்கையின் பொருளாதாரத்தை சிதைக்க முனைகின்றனர். இலங்கை மீது பாரிய பொருளாதார போர் தொடுக்கப்பட்டுள்ளது. ஆயுதங்களை கொண்டு முறியடிக்க முடியாத போர் இது. இலங்கையின் சுற்றுலாத் தொழிலை முடக்குவதே இதன் பிரதான இலக்கு.

போர்க்குற்றங்களைச் சுமத்தி நாட்டின் அரசியல் தலைவர்களையும் இராணுவத்தளபதிகளையும் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள் என்றெல்லாம் அவர் உணர்ச்சி பொங்க கூறியுள்ளார்.

ஒரு பக்கத்தில் புலிகள் முற்றாகவே அழிக்கப்பட்டு விட்டதாகவும் அவர்களால் எதுவும் செய்ய முடியாதென்றும் அவரே கூறுகிறார். இன்னொரு பக்கத்தில் அவர்கள் பலமான பொருளாதாரப் போரைத் தொடுத்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

இது தெற்கில் உள்ள மக்களை உசுப்பிவிடுவதற்கு அரசாங்கம் மேற்கொள்கின்ற முயற்சியே என கருதப்படுகிறது. போர்க் குற்றச் சாட்டுக்களுக்காக அரசாங்கத்தை தண்டிக்க சர்வதேசம் முனைவதாக ஒரு அனுதாபத்தை தேடுவதற்கு முயற்சிகள் நடக்கலாம். அதை விட இதன் மூலம் ஒரு தேசிய எழுச்சியை உருவாக்கலாம் என்று அரசாங்கம் கணக்குப் போடலாம்.

இதனால் உள்ளூராட்சித் தேர்தலில் போர்க்குற்றச்சாட்டுகளை சுமத்தும் மேற்குலகை ஆளும்கட்சி அரசியல் வாதிகள் நார்நாராகக் கிழித்துப் போடப் போகின்றனர். அது மட்டு மன்றி இந்த விவகாரம் தான் பிரசார காலத்தில் முக்கியமானதாக மாறவும் போகிறது.

இதன் மூலம் விலைவாசி உயர்வு, பொருளாதாரப் பிரச்சினைகளை எல்லாம் ஓரம்கட்டிவிட அரசாங்கம்


பிரபாகரன்

முனையலாம். அதை விட சர்வதேச அளவில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரப்போர் தொடங்கப்பட்டிருப்பதால்தான் உள்நாட்டில் இந்த நிலை ஏற்பட்டது என்று கூடக் கூறலாம்.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை வெளியாகவுள்ள சூழலில் ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடக்கவுள்ள சூழலில் அரசாங்கத் தரப்பிற்கு எதிரான போர்க்குற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் அதற்கு அரசியல் ரீதியாக பெரிதும் கைகொடுக்கக் கூடிய பிரசாரமாக மாறும் வாய்ப்புகள் உள்ளன.

கே.சஞ்சயன்

# உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுத் தெரிவு தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் மோதல்


## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும்கட்சியின் கூட்டணிகளுக் கிடையே உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுத்தெரிவு விடயத்தில் கடும் கருத்து மோதல்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் போது ஆளுங்கூட்டணியின் ஏனைய கட்சிகளுக்கும் அபேட்சகர்களை நிறுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்று கட்சித் தலைவர்கள் மத்தியில் கருத்தொருமைப்பாடு ஏற்பட்டிருந்தது.

ஆயினும் சில இடங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் ஏனைய கட்சி அபேட்சகர்களுக்கு சந்தர்ப்பமளிக்காது தட்டிக்கழிக்க முற்படுகின்றனர்.



அதன் காரணமாக, கூட்டணிக் கட்சிகளுக்கு மத்தியில் கடும் அதிருப்தி நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

அதன் காரணமாக, எதிர்வரும் தேர்தலின் போது ஆளும்கட்சிக் கூட்டணியின் வாக்கு வீதம் குறைவதற்கான வாய்ப்பிருப்பதாகவும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அம்பாறையில் 6 உள்ளூராட்சி சபைகளுக்கு த.தே.கூட்டமைப்பு வேட்பு மனுத்தாக்கல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தில் 6 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களை அம்பாறை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்துள்ளது.

முன்னாள் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் தோமஸ், சந்திரநேரு சந்திரகாந்தன், முன்னாள் மாநகரசபை உறுப்பினர் அ.விஜயரெத்தினம் ஆகியோர் நேற்று முன்தினம் இவ் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

காரைதீவு, ஆலையடி வேம்பு, திருக்கோவில், பொத்துவில், நாவிதன் வெளி, சம்மாந்துறை ஆகிய ஆறு பிரதேச சபைகளுக்கு மேற்படி வேட்பு மனுக்கள் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபைகளின் முன்னாள் தவிசாளர்கள் நால்வர் உள்ளிட்ட பல பிரமுகர்கள் பட்டியலில் உள்ளனர்.

பல புது முகங்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர். காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஜீவராசா தலைமை வேட்பாளராக போட்டியிடுகின்றார்.

காரைதீவு பிரதேச சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் தலைமை வேட்பாளராக முன்னாள் தவிசாளரும் பிரபல சமூக சேவையாளருமான நடராசா ஜீவராசா நியமிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் அறுவருக்கு எதிராக பிடியாணை உத்தரவு

இறுதிக்கட்ட யுத்த காலத்தின் போது நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்க்கு கொழும்பு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடையாது சட்ட விரோதமான முறையில் நாட்டை விட்டுத்தப்பிச் சென்றிருக்கும் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் ஆறுபேருக்கு எதிராகவே மேற்குறித்தவாறான பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களைக் கண்டுபிடித்து கைது செய்யும் விடயத்தில் சர்வதேச பொலிஸான இன்டர்போலின் உதவியை நாடவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த விடுதலைப்புலிகளின் ஆறு முக்கியஸ்தர்கள் தவிர இன்னும் பலரும் இறுதிக் கட்ட யுத்தத்தின் பின் நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளதாக நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்த பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார், எதிர்காலத்தில் அவர்களையும் கைது செய்து நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் சில இலங்கையிலிருந்து வெளியேற்றம்

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்க நிறுவனங்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என யுனெஸ்கோவின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

பாரிஸில் இடம்பெற்ற யுனெஸ்கோ மாநாட்டில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் வெளிநாடுகளில் இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தவறான பிரசாரங்களே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் அவர்கள் வெளிநாடுகளில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான போலியான பிரசாரங்களை மேற்கொள்கின்ற ஒழுங்கமைப்புக்கள், யுனெஸ்கோ போன்ற முக்கியமான நிறுவனங்களுடன் தொடர்பினை பேண அனுமதிக்கக் கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# நீர்வேலியில் கலை பண்பாட்டு விழா

(கொழும்பு)

வலி.கிழக்குப் பிரதேச பண்பாட்டுப் பேரவையினரின் மாதந்தோறும் கலை பண்பாட்டு விழாத்திட்டத்திற்கு அமைவாக நீர்வேலி பிரதேச மக்களால் நடத்தப்படும் கலை பண்பாட்டு விழா எதிர்வரும் சித்திரை மாதம் இடம்பெறவுள்ளது.

இவ்விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகவும் இக்கூட்டத்தில் அனைவரையும் பங்குகொள்ளுமாறும் நீர்வேலி தெற்கு, வடக்கு, மேற்கு கிராம அலுவலர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஸ்ரீ)

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும் நகர அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டமும் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் அம் மன்றத்தின் செயலாளர் தலைமையில் நடைபெறும். (ஸ்ரீ-2-29)

# இடமாற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலக தொழிற் பயிற்சி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய ஆர்.முரளிதரன் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு திறன் அபிவிருத்தி உதவியாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2-29)

# கடந்த வருடத்தில் தேயிலை, இறப்பர் உற்பத்தி அதிகரித்துள்ளது

(கொழும்பு)

நாட்டில் கடந்த வருடத்தில் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் சாதனை படைக்கும் அளவுக்கு அதிகரித்துள்ளன.

தேயிலை உற்பத்தி 14 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், தேயிலை உற்பத்தியின் மூலம் மட்டும் கடந்த வருடத்தில் 150 பில்லியன் ரூபாவை செலாவணியாக பெற்றுக் கொண்டுள்ளோம் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

கடந்த ஆண்டில் 329 மில்லியன் கிலோ கிராம் தேயிலை நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 14 வீதமான அதிகரிப்பாகும். மேலும் கடந்த வருடம் தேயிலை உற்பத்திக்கு காரணமாக, 150 பில்லியன் ரூபா அந்நிய செலாவணி கிடைத்துள்ளது உண்மையிலேயே தேயிலை உற்பத்தி அதிகரிப்பை பொறுத்தவரை அதுவொரு சாதனை அதிகரிப்பாகும்.

நாட்டில் தேயிலை உற்பத்தியில் 76 வீதமானது சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களினால் பங்களிப்பு செய்யப்படுகின்றது.

எஞ்சிய 24வீதமே தேயிலை தோட்டக் கம்பனிகளினால் வழங்கப்படுகின்றது. நாட்டில் சுமார் 4 இலட்சம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் உள்ளனர்.

அவர்களுக்கு எதிர்காலத்தில் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும். கடந்த 1999 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை தேயிலைக் கொழுந்து ஒரு கிலோவின் விலையானது 30 ரூபாவாகவே காணப்பட்டது.

ஆனால் 2009 ஆம் ஆண்டு 60 ரூபாவாகவும் கடந்த வருடம் 65 ரூபாவாகவும் உயர்வடைந்தது.

மேலும் தேயிலை உற்பத்தியின் தரத்தை நாங்கள் குறைக்கவில்லை. அதனை அதிகரித்துள்ளோம். மேலும் உலக சந்தையில் இலங்கை தேயிலைக்கு அதிக விலையை பெறுகின்றோம். எமது நாட்டின் தேயிலைக்கான கேள்வி தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.


நாட்டில் இறப்பர் உற்பத்தியும் கடந்த வருடத்தில் அதிகளவில் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் தொன் இறப்பர் உற்பத்தி செய்யப்பட்டது.

ஆனால் 2009 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் மெட்ரிக் தொன் இறப்பரே உற்பத்தி செய்யப்பட்டது.


அத்துடன் இறப்பருக்கு கடந்த வருடத்தில் நாங்கள் அதிக விலையைப் பெற்றுக் கொண்டுள்ளோம். அரசாங்கத்தின் சரியான பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாகவே இவ்வாறு உற்பத்திகள் அதிகரித்துள்ளன.

அத்துடன் இறப்பர் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுப்போம்.


இதேவேளை நாடளாவிய ரீதியில் மேலும் இறப்பர் செய்கைளை மேற்கொள்ள அரசாங்கம் பிரதேசங்களையம் காணிகளையும் அடையாளம் கண்டுவருகின்றது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)



*யா/புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 இல் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி செல்வி லோகேஸ்வரன் பிரவீணா இப் பாடசாலைக்கு உருக்கு அலுமாரி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளதைப் படத்தில் காணலாம்.*
*(படம்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)*



# கள்ளிக்காட்டு 27



கவிப்பேரரசு வைரமுத்து

"அப்படியே செஞ்சுக்கிருவோம். நீங்க குடுக்கற காசுக்கு ஒரு மாட்ட விட்டுட்டு ஒரு மாட்ட ஓட்டிட்டுப் போறோம். ஒரு மாசம் கழிச்சுப் பணத்தைப் 'பைசல்' பண்ணிட்டு மாட்ட ஓட்டிட்டு வாங்க."

அவ்வளவுதான்! செவல மாட்டின் வால் தூக்கி உண்ணி நசுக்கிக் கொண்டிருந்த மொக்கராசுக்கு எங்கிருந்துதான் அந்தத் 'தாட்டியமும்' 'தகிரியமும்' வந்ததோ? வீசியெறிந்த கவனிலிருந்து விடுபட்ட கூழாங்கல் மாதிரி பழித்தவனின் மார்பு நோக்கிப் பாய்ந்து அவனை-முட்டித் தள்ளித் தரையில் உருட்டி, விழுந்தவன் அதிர்ச்சியிலிருந்து விடுபடுவதற்குள் அவன் குரல்வளையைக் கடிக்க முயன்று அவன் அப்படியும் இப்படியும் தலையாட்டித் தப்பிக்க முயன்றதில் வாய்க்குச் சிக்கியது காதுதான். அதைக் கடித்தான். காது மடலின் குருத்தெலும்புக்குக் கீழே கொழுந்து வெத்தலை மாதிரி மெல்லிசாய் இருக்கும் காதுச்சதை கடித்து அதை 'நறுச் நறுச்' சென்று மென்று அவன் மூஞ்சியிலேயே துப்பினான். கடிபட்டவன் தன் வலிமையெல்லாம் சேர்த்து அவனைத் தூக்கியெறிய - அம்பலக்கல்லுக்கு அந்தப்பக்கமாய் மாடுகளின் காலிடுக்கில் விழுந்தான் மொக்கராசு.

கோடாங்கிப்பட்டிக்காரன் சூரி உருவ, பலாறுபட்டிக்காரன் அரிவாள் எடுக்க, கள்ளிப்பட்டிக்காரர்கள் வாச்சாத்தையும் கடப்பாரையும் தூக்கி, "வாங்கடா மாப்பிள்ளைகளா" என்று வரிஞ்சு கட்டி நிற்க, இரண்டு கோபக்காரக் குழுக்களுக்கு மத்தியில் கும்பிட்டு விழுந்த பெரிசுகள்

"வெட்டணும்னா எங்கள வெட்டுங்கடா..." என்று தடுத்துத் தெண்டனிட்டார்கள்.

"அவனக் கொல்லாம விடமாட்டேன்" என்று கடிபட்டவன் காதில் ஒழுகிய ரத்தத்தோடு கத்தினான்.

கள்ளிப்பட்டிக்காரர்கள் மொக்கராசைச் சுற்றி மொய்த்து மனிதக்கவசமானார்கள்.

இரண்டு பக்கமும் பெரியாளுக தலையிட்டு கையக்காலப் புடிச்சு அமர்த்தினார்கள்.

"காசக்குடு... இல்லாட்டி மாட்டக் குடு" எதிராளிகளின் குரலின் சூடுமட்டும் குறையவில்லை.

கூச்சலும் ஏச்சும் பதற்றமும் கூடக் கூட ரத்தப்பலி ஆகிப்போகுமோ என்று கவலைப்பட்ட ஆசாரி படீரென்று குதித்து அம்பலக் கல்லில் ஏறி நின்றார்.

சொல்றேன் கேளுங்கப்பா. ஒருத்தன் பண்ண குத்தத்துக்கு ஊர்ப்பகை வந்துற வேணாம். காசு கொடுத்து ஏமாந்தவன் காசுகேக்குறான். நியாயந்தான...? கொடுக்க வேண்டியது நூத்தித் தொண்ணூறு. கைவசம் நூறை நெருக்கி இருக்கு. கள்ளிப்பட்டிக்கு மானம் மரியாதி இல்லையா? தலைக்கு ஒரு ரூவா போட்டா நூறு ரூவா சேராதா? அதை நொட்டாங் கையில வாங்கி விட்டெறிஞ்சிட்டு வேலையப் பாருங்கப்பா!

அம்பலக்கல்லிலிருந்து தரையில் குதித்துக் கூட்டத்தில் துண்டேந்தினார் ஆசாரி. அவர் பேச்சில் அருள்வந்து ஆவேசமான கூட்டம் ஒண்ணும் காலும் அரையுமாய்த் துண்டை நிரப்பியது. சிலபேர் வீட்டுக்கு ஓடிப்போய் அடுக்குப் பானையில் டப்பாவில் உண்டியலில் கிடந்த காசுகளைக் கூடக் கொண்டு வந்து கொட்டினார்கள். எந்தக் காசிலும் ஜாதி ஒட்டியிருக்கவில்லை.

காசுகளை எண்ணிக் கணக்குப் பார்த்து எச்சாயிருந்த காசுகளையும் "காப்பிச் செலவுக்கும் காதுகடிச்சலுக்கும் வச்சுக்குங்க" என்று கொடுத்துக் கணக்குத் தீர்த்து அவர்களை வழியனுப்பி வைத்தார்கள் கள்ளிப்பட்டிக்காரர்கள்.

"கும்பிட்டகை கும்பிட்டபடி இந்தக் கடனை

# இதிகாசம்

எப்படித் தீப்பேன்... ஆனா எப்படியும் தீப்பேன்!" என்று கண்ணீர் கசிந்து கொண்டிருந்தார் பேயத்தேவர்.

மழை கழிந்த வானம் தெளிவாக இருப்பதுமாதிரி கண்ணீர் கழிந்த மாடுகளின் கண்களில் ஒரு நிம்மதி தெரிந்தது.

அன்றைக்கு ராத்திரி தாழ்வாரத்தில் சிமிட்டிச் சிமிட்டி எரிந்து கொண்டிருந்த லாந்தருக்குப் பக்கத்தில் தாத்தாவும் பேரனும் உட்கார்ந்திருந்தார்கள்.

'மஞ்சட்டி'யில் அவித்த மொச்சைக்காயை மரக்காவில் கொட்டிக்கொண்டிருந்தாள் முருகாயி. மொச்சைக்காயை உரித்து உரித்துப் புழுவில்லாமல் பழுதுபார்த்து பயறுகளை மட்டும் கும்பாவில் நிரப்பிக் கொண்டிருந்தார்கள் தாத்தவும் பேரனும். கும்பா நிறையும் வரைக்கும் பொறுமை இல்லாமல் ஒருகை ரெண்டுகை அள்ளி மாறிமாறித் தின்றும் கொண்டார்கள்.

ஊரே ஒண்ணுகூடி இன்னைக்கி மானம் காப்பாத்திட்டாங்களப்பா! இந்த மனுசங்கள மறக்க முடியுமா? இந்த மண்ணத்தான் மறக்க முடியுமா?

"தாத்தா? இந்த ஊர்தான் நமக்குப் பூர்வீக ஊரா?"

"இல்லப்பா. இது சொந்த ஊர் இல்ல; மூணு தலைமுறைக்கு முன்ன நாம வந்த ஊரு!"

"அப்படீன்னா?"

சாய்ந்து கொண்டு கதை சொல்லத் தயாரானார் தாத்தா; சம்மணங்கால் போட்டுக் கதை கேட்கத் தயாரானான் பேரன்.

உரித்த மொச்சையை ஒருகை அள்ளி வாய்க்குள் எறிந்து மென்றுமுடித்துத் தண்ணீர் குடித்து- மீசை துடைத்துத் தொண்டை கனைத்துப் பூர்வீகம் சொல்லத் தயாரானார் பேயத்தேவர்.

கள்ளிப்பட்டி மாதிரி காக்கா பறக்காத காடோ, காடை முட்டையிடாத மேடோ இல்ல நம்ம பூர்வீக பூமி. இங்கிருந்து கெழக்க எழுபது எண்பது மைலாம். ஆத்தோரம் ஊராம். நல்ல தண்ணிச் செழிப்பாம். பொக்கு நெல்லவெதைச்சாலும் பொலியாகுமாம். பாக்குற பக்கமெல்லாம் பச்சப்பசேல்ன்னு இருக்குமாம். அவுத்துவிட்டா ஆடுமாடுக அதாமேஞ்சு அதாத் திரும்புமாம்.

அங்க காயாம்புத் தேவரு காயாம்புத் தேவருன்னு ஊர்ப்பெருசு. பெருங்கொண்ட குடும்பம். ஒழுங்கு முறையான ஆளு. அவுரு 'எந்திரி'ன்னா ஊரு எந்திரிக்குமாம்; 'ஒக்காரு'ன்னா ஊரு ஒக்காருமாம். சண்டைக்குப் போனா அர்ச்சுனன்; சபைக்கு வந்தா தர்மன். அப்படி ஒரு ஆளாம். ஆறு பயக அவருக்கு. வினயமான பயக; வெடிமுத்து மாதிரி... ஆறு பயகளுக்குப் பெறகு காயாம்புத்தேவருக்கு ஒரு பொண்ணு பொறந்தா காலம்போன கடைசியில. அவ அழகுன்னா அழகாம் அப்பிடி ஒரு அழகாம்... பட்டுத்துணியில பஞ்சடைத்தமாதிரி. கருநாவப்பழம் போல கருகருன்னு முடியாம். கம்பி மத்தாப்புக் கொளுத்துறமாதிரி கதகதன்னு கண்ணாம்.

சும்மா சிலைக்குச் செஞ்சுவச்ச மாதிரி தூக்கலா ஒரு மூக்காம். ஒன்னியக் கொல்லாம விடமாட்டேன்னு கூப்பிடுமாம் ஒதடு. ரெண்டு செப்புக் கொடத்துல செஞ்சுவச்சமாதிரி... நீ சின்னப் பய! ஒனக்கது வேணாம்... என்று அதைத் தொட்டும் தொடாமலும் தாண்டிய பேயத்தேவர் இன்னொருகை மொச்சைப்பயறு அள்ளி மென்று தின்று கடைசி விழுங்குதலுக்குமுன் தொடர்ந்தார்.

முத்து மாதிரி பளீர்னு கண்ணத்தொறந்து பாத்ததால் அவளுக்கு முத்துக்கண்ணின்னு பேரு வச்சிருக்காக. ஊரே அதிசயமாப் பாக்குது அவள. அவ வளர வளர வண்டி கட்டி வந்து பாக்குது பட்டி தொட்டியெல்லாம். ஆத்துக்குக் கொடமெடுத்து அவ போனான்ன அவள முன்ன நடக்க விட்டுப் பின்ன நடந்து போவாகளாம் பொண்டுகள்ளாம். காரணம் அவ பாத அழகு பாக்கணுமாம். அவ உள்ளங்காலு அப்பிடி ஒரு செவப்பாம். தக்காளிப் பழத்தத் தோல உரிச்சாச் 'செக்கச் செவேர்'ன்னு சிரிக்குமே ஒரு சதை... அப்படிச் செவந்திருக்குமாம் முத்துக்கண்ணி பாதம். நம்மூர்ல தெரியாதா...? ஊருதுன்னாப் பறக்குதும்பாங்களே...!

நாள் ஆக ஆக அவ ஒரு தெய்வகடாச்சமுள்ள பொண்ணுன்னு பொரளி கெளப்பிட்டாங்க. கருதறுக்கப் போற பொம்பளைக பண்ணருவான அவ கிட்டக் குடுத்துத்தொட்டு வாங்கிட்டுப் போவாளுக. வெதமரக்கால அவகிட்டக் குடுத்து வாங்கிட்டுப் போவாக. அவ புடிகயிறத் தொட்டுக் குடுத்தாப் போதுமாம்; ஈனாத பசுவும் ஈனுமாம்.

ஒரு நா விடிஞ்செழுந்துபார்த்தாக் கழுத்துக்கும் கீழ முத்துக்கண்ணிக்குச் சின்னதா ஒரு தேமல் வந்துச்சாம், ஓரணா அகலத்துக்கு, சல்லிக்காசு தடிப்புக்கு லேசா சாம்பப்புடைச்சு மேடுகட்டி நின்னுச்சாம், ஆத்தா அப்பன் அண்ணந்தம்பியெல்லாம் 'குய்யோ முறையோன்னு' கூடியழுதாக. தங்கக்கட்டி மேல தடிப்பு வந்திருச்சேன்னு பொலம் புனாக, என்ன செய்யலாம் ஏது செய்யலாம்ன்னு யோசிக்க, கழுதப் பால்ல குளிச்சாத்தான் தேமல் போகும்னு வயசான ஒரு ஆளு வைத்தியஞ் சொல்ல அண்ணந்தம்பி ஆறு பேரும் அலஞ்சாங்களாம் காடு மலையெல்லாம் கழுதப்பால் தேடி.

(வளரும்)



# அ'புர சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்

## ஜனநாயக மக்கள் முன்னணி வலியுறுத்து

அநுராதபுர சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

அநுராதபுர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலக நிலைமையை அடுத்து கட்சியின் பொதுச் செயலாளர் குமாரகுருபரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபடாத அப்பாவிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ)

# தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் கதிர்காமத்தில்

(கொழும்பு)

நாட்டின் 63 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் மிகப் பிரமாண்டமான அளவில் கதிர்காமத்தில் நடைபெறவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி காலை 6.30 முதல் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கிரி விஹாரை, பிள்ளையார் கோயில், முஸ்லிம் பள்ளிவாசல், புத்தள கிறிஸ்தவ தேவாலயம் ஆகியவற்றில் மத வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட உரையாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் டி.எம்.ஜயரட்ன, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திரிகள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ)

# ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்காவுக்கு பயணமாகியிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை நாடு திரும்பினார் என்று ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரகாலமாக அமெரிக்காவில் தங்கியிருந்த நிலையிலேயே ஜனாதிபதி நேற்று நாடு திரும்பியதாக அவர் மேலும் கூறினார். இதேவேளை ஜனாதிபதியின் மேற்படி தனிப்பட்ட விஜயத்தில் கலந்து கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் மாலை நாடு திரும்பியதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் மேற்படி விஜயம் தொடர்பில் பலரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற நிலையில் அவரது அந்த விஜயத்தின் உண்மைத் தன்மையை வெளியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பொன்சேகா விவகாரம் சர்வதேச நீதிமன்றம் வரை கொண்டுசெல்லப்படும்

## ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

சரத்பொன்சேகாவின் வழக்கு விசாரணைகள் தொடர்பில் சர்வதேச நீதிமன்றில் நியாயம் கோருவதற்கு தயங்கப் போவதில்லை என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தேவை ஏற்பட்டால் சரத்பொன்சேகா விவகாரம் சர்வதேச நீதிமன்றங்கள் வரையில் கொண்டு செல்லப்படும் என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றத்தை அரசியல் சாசனத்தின் அடிப்படையில் நீதிமன்றமாக ஏற்றுக்கொள்வதா என்பது தொடர்பில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள போதிலும், சரத் பொன்சேகாவிற்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் பதில் எதனையும் அளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள் ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான முனைப்புக்கள் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்

## ஐ.நா.தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இடம்பெயர் முகாம்களில் தங்கியிருப்பவர்களும், மீள்குடியேற்றப்பட்டவர்களும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதாபிமான விவகாரச் செயலாளர் கெதரீன் பராக் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றப்பட்ட மக்கள் பல்வேறு வசதிகளின்றி இன்னமும் அல்லலுறுவதாகவும் இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் பாரியளவு பங்களிப்பினை வழங்கி யுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இன்னமும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு பற்றிய விடயங்கள் பற்றி தாம் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிபுணர் குழுவின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக தாம் இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை எனவும், நிபுணர் குழுவை சந்திக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தை கடுமையாக காயப்படுத்தியுள்ளது

## ஜே.வி.பி.பொதுச் செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தை கடுமையாக காயப்படுத்தியுள்ளதென ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை எனவும் அரசாங்கம் நீதிமன்றத்தைக் கூட மதிப்பதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் இந்த நிலைமைகளைக் புரிந்துகொண்டு பாரியளவு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நுரைச்சோலை அனல் மின்நிலையம் அடுத்த வாரம் முதல் இயங்கும்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தின் நுரைச்சோலை பகுதியில் சீனாவினால் அமைக்கப்பட்டு வரும் அனல்மின் நிலையத்தின் முதற்கட்ட பணிகள் முடிவடைந்து வருவதால் அடுத்த வாரம் முதல் இயங்க ஆரம்பிக்கும் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அடுத்தவாரம் முதல் 300 மெகாவோட் சக்தி உற்பத்தி செய்யப்படும்.

ஆனால், பணிகள் முற்றாக நிறைவு பெற்றதும் அது 900 மெகாவோட் சக்தியை உற்பத்தி செய்யும் நிலையை அடையும்.

455 மில்லியன் டொலர் செலவில் மூன்று கட்டங்களாக அமைக்கப்படும் இந்தப் பணிகள் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நிறைவு பெறும் என தெரியவருகிறது. (ஸ்ரீ-2)



யா/கலட்டி மெ.மி.த.க.பாடசாலையின் கால்கோள் விழா கடந்த 18ஆம் திகதி அதிபர் கா.ரவீந்திரராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய ஆசிரியர் வள நிலைய வளவாளர் கே.துஸ்யந்தன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் ஜெ.குகன்யா ஆகியோர் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் அமர்ந்திருப்பதையும் புதிதாக இணைந்த தரம் 1 மாணவருக்கு அன்பளிப்புப் பொருள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# புதிய நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யா/புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தின் இவ்வாண்டுக்கான பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக பதவிவழி அதிபர் இரா ஜெயக்குமார், செயலாளராக சு.தேவராசா, பொருளாளராக ஆசிரியர் க. ஜெகதீஸ்வரன், உப செயலாளராக மு.கதிர்காமநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் ஆறுபேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (ஸ்ரீ-2)

## இத்தாலி அரசாங்கம் இலங்கைக்கு உதவி

(கொழும்பு)

அனர்த்த காலங்களில் நிவாரண சேவைகளை வழங்குவதற்கான உபகரணத் தொகுதி ஒன்றினை இத்தாலி அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

51 மில்லியன் யூரோக்கள் பெறுமதியான இந்த உபகரணங்கள் ரோம் நகரில் இருந்து விமானத் தில் ஏற்றப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் நீரில் மிதக்கக்கூடிய பாதுகாப்பு பலூன்கள் ,கூடாரங்கள், நீர்த்தாங்கிகள், சுத்திகரிப்பு சாதனங்கள் மற்றும் மின் பிறப்பாக்கிகள் என்பன இந்த உபகரணங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஶ்ரீ-2)

## ஈராக் வேலைவாய்ப்பு கட்டுப்பாடுகள் நீக்கம்

(கொழும்பு)

ஈராக்கில் இலங்கையர்கள் வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் யுத்தம் ஆரம்பித்த காலத்தை விட தற்போது அங்கு நிலைமை அமைதியாக இருப்பதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் டிலான் பெரேராவினால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

ஈராக்கில் நிர்மாணத்துறை வளர்ச்சியடைந்து வருவதால் அதிக ஊதியத்துடனான வேலைவாய்ப்புகள் பெற வழியேற்படும் என கிங்ஸ்லி ரணவக்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை முதற்கட்டமாக எதிர்வரும் பெப்ரவரி மாதத்திலிருந்து ஈராக்கின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு அமைச்சு அனுமதி வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஶ்ரீ-2)

## மாத்தளையில் ஆளும் கட்சி பிரதேச சபை உறுப்பினர்கள் சுயாதீனமாக போட்டி

(கொழும்பு)

மாத்தளையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் சுயாதீனமாக போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

மாத்தளை வெளிகமுப பிரதேச சபையின் ஏழு ஆளும் கட்சி உறுப்பினர்களும் இவ்வாறு சுயாதீனமாக போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

பிரதேச சபைத் தலைவரும் இதில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எந்தவிதமான நியாயமான காரணங்களும் இன்றி சில முன்னாள் உறுப்பினர்களுக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் மறுக்கப்பட்ட காரணத்தினால் ஒட்டுமொத்த ஆளும் கட்சி பிரதேச சபை உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் வசந்த பெரேரா சில வேட்பாளர்கள் பெயரை நீக்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கட்சிக்கு எதிராக செயற்பட்ட நபர்களுக்கு கட்சியின் சார்பில் மீளவும் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என வசந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

(ஶ்ரீ-2)

## சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற வெற்றிடத்துக்கு ஜயந்த கெட்டகொட?

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் வெற்றிடத்திற்கு ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படக்கூடும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ நீதிமன்றம் நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பிற்கு உட்பட்டது என உச்ச நீதிமன்றம் அண்மையில் அறிவித்திருந்தது.

இதன்படி சரத் பொன்சேகா பாராளுமன்ற ஆசனத்தை இழக்க நேரிடுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த விவகாரம் தொடர்பான தீர்ப்பை இன்னமும் அறிவிக்கவில்லை. தீர்ப்பு அறிவிக்கப்படும் வரையில் சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற ஆசன வெற்றிடத்தை நிரப்புவதில்லை என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்து.

இதன்படி விருப்பு வாக்குகள் அடிப்படையில் அடுத்த நிலையை பெற்றுக்கொண்டிருந்த லக்ஸ்மன் நிபுணாராச்சி பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவில்லை.

மூன்று மாத காலத்திற்குள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளத் தவறியதனால் அடுத்தபடியாக விருப்பு வாக்கு பெற்ற வேட்பாளர் இந்தப் பதவிக்கு தகுதி பெற்றுக் கொள்வதாக அண்மையில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

இதன் படி ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்திற்கு ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜயந்த கெட்டகொடவும் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளத் தவறினால் அடுத்த படியாக விருப்பு வாக்கு பெற்றுக்கொண்ட சரத் மனமேந்திராவிற்கு ஆசனம் கிடைக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது.

சரத் மனமேந்திரா அண்மைக் காலமாக கட்சிக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை குறித்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நிரப்புவதில் அவசரம் காட்டப்படமாட்பாது என கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

(ஶ்ரீ-2)

## மட்டக்களப்பில் 2 சுயேட்சைக்குழுக்கள் நேற்று முன்தினம் வேட்புமனுத் தாக்கல்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பில் இரண்டு சுயேட்சைக்குழுக்கள் தமது வேட்புமனுவை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் அரசாங்க அதிபருமான சுந்தரம் அருமையநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏறாவூர் நகர சபைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக முகம்மது அலி மற்றும் முகம்மது உவைஸ் தலைமையிலான ஒரு சுயேட்சைக்குழுவும் உமர்லெவ்வை ஹயாத்து முகம்மது தலைமையிலான 'இன்னுமொரு சுயேட்சைக்குழுவும் நேற்று முன்தினம் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக 39 சுயேட்சைக்குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

இதற்கமைய காத்தான்குடி நகர சபைக்காக 18 சுயேட்சைக்குழுக்களும் ஏறாவூர் நகர சபைக்காக 16 சுயேட்சைக்குழுக்களும் ஓட்டமாவடி பிரதேச சபைக்காக 5 சுயேட்சைக்குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஶ்ரீ-2)

## அமெரிக்கா,கனடாவுக்கு அனுப்புவதாக கூறி மோசடி செய்த நால்வர் கைது

(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் உயர் கல்விக்கான விசா பெற்றுத் தருவதாக வாக்களித்து இலட்சக்கணக்கில் மோசடி செய்த நால்வர் கொழும்பை அண்மித்த பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பை அண்டிய ஹொரணை மற்றும் நுகேகொட பிரதேசங்களில் அவர்கள் தமது அலுவலகங்களை நடாத்தி வந்துள்ளனர்.

அவர்களின் ஏமாற்று நடவடிக்கையுடன் தொடர்புடைய இருவர் கனடா மற்றும் அமெரிக்காவில் வசிப்பதாக அறியப்பட்டுள்ளது. இவர்களின் விளம்பரத்தை நம்பி வரும் மாணவர்களிடமிருந்து விசா பெற்றுத் தருவதற்கான கட்டணமாக பெருந்தொகைப் பணத்தை குறித்த வெளிநாட்டில் வதிபவர்களின் கணக்கு இலக்கங்களுக்கு வரவு வைக்குமாறு கூறப்படுகின்றது.

அதனை நம்பி வரவு வைக்கும் மாணவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். அதன் காரணமாக பலர் பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர் தற்போது அதன் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ஶ்ரீ-2)

## ரத்வத்தைக்கு எதிரான வழக்கு ஒத்தி வைப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு தனது சொத்துக்களை சேர்த்த விதம் பற்றி விளக்கம் அளிக்க தவறிய முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எதிரான வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றம் எதிர்வரும் பெப்ரவரி 14ஆம் திகதி வரை ஒத்தி வைத்தது.

இந்த வழக்கு மேல் நீதிமன்றுக்கு வந்த போது அனுருத்த ரத்வத்தையின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி றென்சி அரச குலரத்ன ஏற்கனவே நீதிமன்றில் எழுத்து மூலம் சகலதும் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

உயர் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை வழக்கு விசாரணையை ஒத்தி வைக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். இதனையடுத்து வழக்கு விசாரணை பெப்ரவரி 14ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

(ஶ்ரீ-2)

## 2011.01 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1547 - எட்டாம் ஹென்றியின் இறப்பு. அவனது 9 வயது மகன் ஆறாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.

★ 1624 - கரிபியனில் முதலாவது பிரித்தானியக் குடியேற்ற நாடான சென் கிட்ஸ்சர் தொமஸ் வார்னர் என்பவரால் அமைக்கப்பட்டது.

★ 1679 - சென்னை கோட்டைப் பகுதியில் சிறு நிலநடுக்கம் உணரப்பட்டது.

★ 1820 - ஃபாபியன் பெலிங்ஷோசென் தலைமையில் ரஷ்யா நாடுகாண் பயணக் குழு அண்டார்ட்டிக்காவை அடைந்தது.

★ 1846 - அலிவால் என்ற இடத்தில் சீக்கியர்களுடன் இடம்பெற்ற போரில் சரி ஹரி ஸ்மித் தலைமையிலான பிரித்தானியப் படைகள் வெற்றி பெற்றனர்.

★ 1882 - சென்னையில் முதன்முதலாக தொலைபேசி அறிமுகப்படுத்தப் பட்டது.

★ 1909 - ஐக்கிய அமெரிக்கப் படைகள் குவாண்டானாமோ விரிகுடாவைத் தவிர்த்து கியூபாவின் மற்றைய பகுதிகளில் இருந்து விலகினர்.

★ 1918 - பின்லாந்தின் தலைநகர் ஹெல்சிங்கியை புரட்சியாளர்கள் கைப்பற்றினர்.

★ 1932 - ஜப்பானியப் படைகள் ஷங்காய் நகரைத் தாக்கினர்.

★ 1935 - ஐஸ்லாந்து கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கிய முதல் நாடானது.

★ 1986 - சாலஞ்சர் மீள்விண்கலம் புறப்பட்ட 73ஆவது வினாடியில் வானில் வெடித்துச் சிதறியதில் ஏழு விண்வெளிவீரர்கள் கொல்லப்பட்டனர்.

★ 2002 - கொலம்பியாவில் போயிங் விமானம் ஒன்று அண்டெஸ் மலையில் மோதியதில் 92 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1853 - ஹொசே மார்த்தி, கியூபாவின் புரட்சியாளர் (இ.1895)

★ 1922 - ரொபேர்ட் ஹோலி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1993)

★ 1925 - ராஜா ராமண்ணா, இந்திய அணுவியல் நிபுணர்.

### இறப்புகள்

★ 1939 - வில்லியம் யீட்ஸ், நோபல் பரிசு பெற்ற ஐரிஸ் எழுத்தாளர் (பி.1865)

★ 1996 - ஜோசப் புரொட்ஸ்கி, நோபல் பரிசு பெற்ற ரஷ்யக் கவிஞர் (பி.1940)

★ 2007 - ஓ.பி.நாயர், இந்தித் திரைப்பட இசையமைப்பாளர்

# சந்தோசத்தைப் பணயம் வைக்கலாமா!

உங்களைச் சுற்றி நடப்பவற்றைக் கவனியுங்கள். உங்கள் மீது இருக்கும் ஆசையால்தான் பூமி தன் புவியீர்ப்பு விசையைச் செலுத்தி, உங்களைத் தன்னோடு வைத்துக் கொண்டிருக்கிறது.

சூரியனில் இருந்து குறிப்பிட்ட தூரத்தில் தனக்கான பாதையை அமைத்துக் கொண்டு இந்தப் பூமி வலம் வருகிறது. அந்தப் பாதையிலிருந்து அது விலகிப் போய்விடாமல், மையத்தில் இருக்கும் சூரியன் ஆசையோடு இழுத்துப் பிடித்திருக்கிறது.

புரிகிறதா... ஆம்... ஆசை இல்லையென்றால் இந்தப் பிரபஞ்சமே இல்லை!



கவனியுங்கள்... பேராசைப்படுங்கள் என்று நான் சொல்லவில்லை. உங்கள் ஆசை பெரிதாக இருக்கட்டும் என்றுதான் சொல்கிறேன்.

இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளுங்கள். ஒரு முறை சங்கரன் பிள்ளை ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். ரயில் எந்த ஸ்ரேசனில் நின்றாலும் சங்கரன் பிள்ளை இறங்கிவிடுவார். இறங்கிய இடத்திலேயே நின்றிருப்பார். வண்டி புறப்படும் போது ஏறிக் கொள்வார்.

சின்ன ஸ்ரேசன், பெரிய ஸ்ரேசன் என்று இல்லை. இரண்டு நிமிடம் நிற்கும் ஸ்ரேசனிலும் இறங்கி ஏறுவார். எதிரிலிருந்த பயணிக்கு சஸ்பென்ஸ் தாங்கவில்லை.

"உங்களைப் பார்த்தால் மிகக் களைப்பாகத் தெரிகிறீர்கள். உங்களோடு வந்தவர்கள் யாராவது காணாமற் போய்விட்டார்களா? புத்தகம், தண்ணீர் ஏதாவது வாங்க வேண்டுமா? எதற்காக இப்படி இறங்கி இறங்கி ஏறிக்கொண்டிருக்கிறீர்கள்?"

சங்கரன் பிள்ளை தலையைப் பலமாக ஆட்டினார். "அப்படியெல்லாம் இல்லை. சமீபத்தில் எனக்கு பைபாஸ் சர்ஜரி நடந்தது. 'நீண்டதூரப் பயணங்கள் கூடாது' என்று என் டாக்டர் சொல்லியிருக்கிறார். அதனால், இந்தப் பயணத்தைக் குட்டிக் குட்டிப் பயணங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறேன்."

'எல்லாவற்றுக்கும் ஆசைப்படு' என்று சத்குருவே சொல்லிவிட்டார் என்று அந்த வார்த்தைகளை மட்டுமே எடுத்துக் கொண்டு நீங்கள் ஆசைப்பட ஆரம்பித்தால்... சங்கரன் பிள்ளை டாக்டரைப் புரிந்து கொண்டது போல் ஆகிவிடும்.

அப்படியானால் எது ஆசை, எது பேராசை?

ஒருவருக்கு ஆசை என்று தோன்றுவது, இன்னொருவருக்குப் பேராசையாகத் தோன்றும்.

பைக் வைத்திருப்பவர் கார் வாங்க நினைத்தால் அதை ஆசை என்பீர்கள். அதையே பிளாட்பாரத்தில் படுத்திருப்பவர் சொன்னால், அது பேராசை என்பீர்கள்.

ஒப்பிட்டுப் பார்த்துப் பெருமூச்சு விடும் குணம் உங்களிடம் இருக்கும் வரை, இந்தக் குழப்பம் தீராது. உண்மையில், உங்களாசை எங்கே தன் வேர்களை ஊன்றியிருக்கின்றது என்று கவனியுங்கள்.

பாட்டிகள் கதை சொல்லும் போதெல்லாம் கவனித்திருப்பீர்கள்... ஒரு ராஜகுமாரன் தன்னை எதிர்ப்பவர்களுடன் கடுமையாகப் போராடி ஜெயித்து, ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி, இன்னும் என்னென்னவோ சாகசங்கள் எல்லாம் செய்து அழகான ராஜகுமாரியைச் சிறைமீட்டு வருவான். அப்புறம் அவர்கள் சந்தோசமாக வாழ்ந்தார்கள் என்று பாட்டி கதை சொல்லி முடிப்பாள்.

சந்தோசமாக வாழ ஆரம்பித்துவிட்டால், காரியம் முடிந்து விட்டது. அப்புறம் போராட்டம். ஆனால் எது சந்தோசம்?

கல்யாணமானால் சந்தோசம் என்று நினைத்தீர்கள். பிறகு, குழந்தைகள் பிறந்தால் வாழ்க்கை முழுமை பெறும் அது தான் சந்தோசம் என்று நினைத்தீர்கள். குழந்தைகளும் பிறந்தன. ஆனால், "இன்றைக்கு என் நிம்மதி போனதற்கே அவர்கள்தான் காரணம்" என்று மனமுடைந்து அழுகிறீர்கள்.

கோடி ரூபாய் கிடைத்தால் சந்தோசம் என்கிறீர்கள். கிடைத்து விட்டது. ஆனால், அதை அனுபவிக்க நேரமில்லாமல், பாண் துண்டுகளைக் கடித்துக் கொண்டே, அடுத்த பிஸ்னஸ் வெற்றிக்காக காரில் ரென்சனுடன் கொம்பியூட்டரைத் தட்டிக் கொண்டே பயணம் செய்கிறீர்கள்.

அமைச்சர் பதவி கிடைத்தால் சந்தோசம் என்கிறீர்கள். கிடைத்த பின்போ, எப்போது நாற்காலி பறிபோகும்... எப்போது வாரண்ட்டுடன் பொலிஸ் வந்து கதவைத் தட்டும்... எப்போது எதிரி கையால் அரிவாள் வீசப்படும் என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அலைகிறீர்கள்.

இப்படித்தான் சங்கரன் பிள்ளையும் ஒருமுறை மாட்டிக்கொண்டார்.

நிறைய சலுகைகள் கிடைக்கும் என்று சொன்னார்களே! என்று சங்கரன் பிள்ளை இராணுவத்தில் சேர்ந்தார். தவறுதலாக, இரண்டு நம்பர் சிறிய பூட்ஸ்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டுவிட்டன. தினமும் அவற்றுக்குள் கால்களை நுழைக்கும் போது, விரல்கள் எல்லாம் ஒன்றன் மீது ஒன்று ஏறிக்கொள்ளும். நாள் பூராவும் அந்தச் சிறிய பூட்ஸ்களைக் கழற்றாமல், அவர் பாதங்கள் வலியில் தவிக்கும். வேதனை தாங்காமல் சங்கரன் பிள்ளை ஊருக்கெல்லாம் சாபம் கொடுத்துக் கொண்டிருப்பார்.

அதிகாரிகளிடம் விஷயத்தைச் சொன்னால், உடனே சரியான அளவு பூட்ஸ்களைக் கொடுப்பார்களே நண்பா... ஏன் இப்படி அவஸ்தைப்படுகிறாய்? என்று சக சிப்பாய் கேட்டார்.

சங்கரன் பிள்ளையிடம் இருந்து கடுப்பாகப் பதில் வந்தது. "நீதான் பார்க்கிறாயே, தினந்தோறும் எவ்வளவு கடுமையான பயிற்சிகள்... எலும்பெல்லாம் இற்றுப் போகும் அளவுக்கு அடுத்தடுத்து



## ஆன்மீகம் 02

வேலைகள். எதிலாவது சந்தோசம் கிடைக்கிறதா? ராத்திரி இந்த பூட்ஸ்களைக் கழற்றிப் போட்டதும் 'அப்பாடா' என்று எப்பேர்ப்பட்ட சந்தோசம் கிடைக்கிறது தெரியுமா? இராணுவத்தில் சேர்ந்ததில் எனக்குக் கிடைக்கும் ஒரே ஒரு சந்தோசத்தையும் இழக்கச் சொல்கிறாயா?"

நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்... சங்கரன் பிள்ளை போல் சந்தோசத்தையே பணயம் வைத்துவிட்டு, 'எப்போதடா பூட்ஸை கழற்றுவோம்' என்று உங்களுக் கும் தவிப்பு வந்திருக்கிறதா, இல்லையா?

'சந்தோசமாக வாழ வேண்டும்' என்பதுதானே உங்களுடைய அத்தனை ஆசைகளுக்கும் அடியில் புதைந்திருக்கும் உண்மை?

நீங்கள் கேட்பது கிடைத்து விடுகிறது. ஆனால், எதற்காகக் கேட்டீர்களோ..... அது - அந்தச் சந்தோசம் மட்டும் கிடைப் பதில்லை!

ஏன் இப்படி? எங்கே தவறு நிகழ்ந்தது?

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஆத்திசூடி: ஒளவையார் - பாரதி - முருகையன் ஒரு கருத்தியல் ரீதியான ஒப்பாய்வு 01

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

தமிழ் இலக்கிய வடிவங்களில் கவிதை இலக்கியத்தின் பொருள் காலத்துக்குக் காலம் வேறுபட்டு வெளிப்பட்டு வந்துள்ளது. இலக்கியத்தில் அறக்கருத்துக்களின் வெளிப்பாடு எந்தக் காலத்திற்கும் பொதுவானது எனினும் சங்கம் மருவிய காலத்தினை அறநெறிக் காலம் என வகுப்பர். எந்தவொரு காலத்திலும் மனிதனுக்கு வாழும் நெறி இது, வாழக்கூடாத நெறி இது என எடுத்துக்காட்டும் அறக் கருத்துக்களை தவிர்த்துவிட்டு இலக்கியத்தினைப் பார்க்கமுடியாது.

தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் அற இலக்கியங்களில் எவ்வாறு திருக்குறளைத் தவிர்த்துவிட முடியாதோ அவ்வாறே திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்ச மூலம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது எனத்தொடரும் சங்கமருவிய கால இலக்கியங்களையும் மறந்துவிட முடியாது. அறநெறி இலக்கிய மரபில் திருவள்ளுவர் பேசப்படும் அளவிற்கு ஒளவையாரும் பேசப்படுவது கவனிக்கத்தக்கது.

ஒளவையார் படைத்த அற இலக்கியங்களில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் போன்றன அழியா வரம் பெற்று இன்றும் நிலைப்பவை. முன்னைய இலக்கியம் ஒன்றின் வடிவம் மற்றும் பொருளை பிற்கால இலக்கிய கர்த்தாக்கள் மறுவாசிப்புச் செய்வதும் அப்படியே பின்பற்றுவதும், வடிவ உடைப்புச் செய்வதும் நிகழ்ந்து வருகின்ற ஒரு செயற்பாடு ஆகும். இந்த நெறியில் ஒளவையார் அருளிய ஆத்திசூடியினை அடிப்படையாகக் கொண்டு மகாகவி பாரதியார் "புதிய ஆத்திசூடி" பாடியுள்ளார்.

இதன் தொடர்ச்சியில் நின்று ஈழத்துக் கவிஞரான முருகையன் "எழுபத்தாறு" என்ற தலைப்பில் இன்னொரு வகையான ஆத்திசூடி பாடியுள்ளார்.

மூன்று வேறு காலகட்டத்திற்கு உரிய கவிஞர்கள் வடிவத்திலும் சொல்லும் முறை யிலும் ஒத்திருப்பினும் கருத்தியல் ரீதியில் வேறுபாடுகள் கொண்டு தமது காலத்தினை பிரதிபலித்து நிற்பதனைக் காணலாம்.

மூன்று கவிஞர்களும் அறம் பிழைத்துப்போன காலப்பகுதிகளின் பிரதிநிதிகள். ஒளவையின் காலம்பற்றிய விவாதங்கள் பல இருந்தாலும் அறநெறி பிழைத்த இடைக்காலத்துக் கவிஞர் அவர். பாரதி காலணிய ஆதிக்க கால நெறி பிறழ்ந்த சமூகப் பிரதிநிதி. முருகையன் ஒரு போர்க் காலத்தின் - முரண்பாட்டுக் காலத்தின் பிரதிநிதி. இந்தப் பின்னணியில் தான் அவர்களின் ஆத்திசூடிகளைக் கருத்தியல் ரீதியாக ஒப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. ஆத்திசூடிக்கான வடிவம் பற்றி நோக்கும் போது, அது ஒளவையின் வடிவமே.


திருக்குறள் எவ்வாறு குறுகத் தறித்த குறள் எனப்பட்டதோ அவ்வாறுதான் ஆத்திசூடியும். அறக்கருத்துக்களை நீள இருந்து கேட்கும் மனோபாவம் மக்களிடம் இல்லை.

நறுக்காக ஒரு விடயத்தை மக்களுக்கு உணர்த்தவல்ல கட்டிறுக்கமான "ஒருவரி உபதேசமாக" இது அமைந்தது. ஒளவையின் ஆத்திசூடி 108 வரிகளைக் கொண்டது. பாரதியின் புதிய ஆத்திசூடி 110 வரிகளைக் கொண்டது. முருகையனின் 75 வரிகளைக் கொண்ட ஆத்திசூடி "எழுபத்தாறு" (முருகையன் எனும் முடியா நெடும் பகல், 2009) என்று வெளிவந்துள்ளது.

இந்த மூன்று கவிஞர்களும் பாடிய ஆத்திசூடியில் ஒருவரியில் ஆகக் கூடுதலாக மூன்று சொற்கள் உள்ளன. பாரதி பாடிய "நாள் எல்லாம் வினை செய்" என்ற வரியை நாளெல்லாம் வினை செய் என்று பகுத்தாலொழிய மூன்று சொற்களே ஆகக் கூடுதலானவை.

மூவரது ஆத்திசூடிகளிலும் அசைகளின் சேர்க்கை, ஒலிப்புக்காலம், சந்தம் என்பவற்றில் ஒருமைப்பாடே காணப்படுகின்றது. சொற்செட்டும் உள்ளுறைப் பொருளின் வீச்சும் ஒத்த தன்மை யானதே. எனினும், கூறப்படும் பொருளிலும் கருத்தியல் நிலைகளிலும் பல வேறுபாடுகள் மிகுந்திருப்பதை அவதானிக்கலாம். இத்தகைய கருத்தியல் ஒற்றுமை வேற்றுமைகளை வெளிக்கொணர்வதே இந்தக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

ஆத்திசூடிக் கவிஞர்களிடையே சமூக நீதி, ஆன்மீக வாழ்வு, அறிவுத்தேடல்




மிக்க கல்வி, உழைப்பின் உயர்வு, கலை நாட்டம், வீரமும் தன்னம்பிக்கையும், தேசப்பற்று, உலகியல் நாட்டம், பழமை வாத எதிர்ப்பு, தொடர்பான பல்வேறு கருத்துக்களில் ஒருமைப் பாடான கருத்தியல்கள் வந்துள்ளன. எனினும் இவர்களின் கருத்துக்களில் பல வேறுபட்ட கருத்தியல்களும் உள்ளன.

இ.இராஜேஸ்கண்ணன்
விரிவுரையாளர்
சமூகவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்




கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் தேவைகள் இனங்காணப்பட்டு வடமாகாண பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தினால் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் உரை யாற்றுவதையும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன்,சமாசத் தலைவர் த. சிவலிங்கம், வலிகாமம் கொத்தணி தலைவர் க.மெய்ய ழகன் ஆகியோர் அருகில் இருப்பதையும் பாடசாலை மாணவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ஆளுநரின் புதிய அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது



(யாழ்ப்பாணம்)

யாழ் .பழைய பூங்கா வீதியில் உள்ள வளாகத்தில் வடமாகாண ஆளுநரின் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை ஆளுநர் நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஸ்ரீ-2)

# மகாபோதி சம்பவம் குறித்து தமிழ்நாடு அரசு கண்டனம்

சென்னை மகாபோதி மீதான தாக்குதல் சம்பவத்தை தமிழக அரசு வன்மையாக கண்டித்துள்ளதுடன் தமிழகத்திலுள்ள இலங்கை நிறுவனங்கள் மற்றும் நலன் பேணல் அலுவ லகங்களுக்குப் பூரண பாதுகாப்பை வழங்குவதற்கும் தமிழக அரசு இணக்கம் தெரிவித்துள்ளதாக சென்னை யிலுள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் ஜீ.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

எழும்பூரிலுள்ள மகாபோதி மீதான தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாக அறிந்த சில நிமிடங்களிலேயே ஸ்தலத்துக்கு விரைந்த அவர் சென்னை சிட்டி பொலிஸ் அத்தியட்சகரை தொடர்பு கொண்டுள்ளார்.

மேலும் உடனடியாக தமிழக அரசின் முக்கியஸ்தர்களுடன் தொடர்பு கொண்டு தமிழகத்திலுள்ள இலங்கை நிறுவனங்களின் பாதுகாப்பு குறித்தும் பேச்சு நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து தமிழகத்திலுள்ள இலங்கை வங்கி, எயர் லங்கா, மகாபோதி உள்ளிட்ட இலங்கை நிறுவனங்களுக்கு 24 மணி நேரமும் கூடு தல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக துணை உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

இதேவேளை மகாபோதி தாக்குதல் சம்பவம் தொடர்பாக தமிழக அரசின் தலைமைச் செயலர் எஸ்.மாலதியையும் துணைத் தூதர் கிருஷ்ணமூர்த்தி அவரது அலுவலகத்தில் சென்று சந்தித்தார்.

இனத்தெரியாத நபர்களினால் நடத்தப்பட்ட இத்தாக்குதல் சம்பவத்துக்கு தலைமைச் செயலர் எஸ்.மாலதி கவலையையும் கண்டனத்தையும் தெரிவித் ததுடன் முழுமையான பாதுகாப்பை வழங்குவதாகவும் உறுதியாளித்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# யாழ்.மாவட்டத்தில் மணலுக்கான தேவை பலமடங்காக அதிகரித்துள்ளது

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவுற்ற பின்பு யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் மணலுக்கான தேவை பல மடங்காக அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அபிவிருத்திப்பணிகள் தடைப்பட்டிருந்த கால கட்டத்தில் மணல் விநியோகமும் மிகக் குறைவாகவே நடைபெற்று வந்தது.

ஆனால் தற்போது நாட்டில் பல அபிவிருத்திப்பணிகள் முன்னெடுத்து வரப்படும் சந்தர்ப்பத்தில் யாழ். குடாநாட்டில் மணல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும் நாட்டின் அபிவிருத்தித்தேவைகள் காரணமாக புவிச்சரிதவியல் திணைக்களம் விடுத்த அறிவுறுத்தல்களை மீறி மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவை தவிர மணல் அதிகூடிய விலைக்கு விற்கப்படுவதாகவும் மக்களினால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்பாடத வகையில் மணல் அகழ்வு இடம்பெற்று அவை மக்களுக்கு நியாயமான விலையில் விற்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வுகாணும் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

உணவுப் பொருட்களுக்கு ஏற்படக் கூடிய தட்டுப்பாடு குறித்து பிரசாரம் செய் யும் அமைச்சர்கள் அதனை எவ்வாறு தடுப்பது என்பது குறித்த தீர்வுத்திட் டங்களை முன் வைக்கத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

மழை வெள்ளம் காரணமாக மரக்கறி வகைகளின் விலை மிகவும் உயர் வடைந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முட்டை மற்றும் வெங்காயம் போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் மரக்கறி விலையைக் குறைப்பது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளும் நுகர்வோரும் நெருக்கடிகளை எதிர்நோக்கும் அதேவேளை இடைத்தரகர்கள் கொள்ளை இலாப மீட்டுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பொதுமக்களின் சாட்சியங்கள் இம் மாதம் இறுதி வரை ஏற்கப்படும்

## நல்லிணக்க ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பொதுமக்களிடமிருந்து சாட்சியங்களை இம் மாதம் 31ஆம் திகதி வரையில் மாத்திரம் பெற்றுக்கொள் ளும் என ஆணைக்குழுவின் ஊடகப்பேச்சாளர் லக்ஷ்மன் விக்ரம சிங்க தெரிவித்துள்ளார்.

எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் வழங்கப்பட்ட சாட்சியங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் இறுதி அறிக்கையை சயாரிக்கும் மகமாக இங்கக் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் மே மாதம் 15ஆம் திகதி அளவில் கையளிக்கப்படவுள்ளது. அத்துடன் பெப்ரவரி மாதம் முதலாம் வாரத்தில் தேவைப்படும் முக்கிய நபர்களிடமிருந்து மாத்திரம் சாட்சிகளைப் பெற இருக்கிறது.

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள கிராம வாசிகளின் சாட்சியங்களை ஆணைக்குழு எதிர்வரும் சனிக்கிழமை பெற்றுக்கொள்ள வள்ளகாக அவர் மேலம்செரிவிச்சார். (ஸ்ரீ-4-9)

# மதுப்பாவனையால் விபத்துக்குள்ளானோருக்கு சிகிச்சையளிக்க 2000 ரூபா அறிவிடத்தீர்மானம்

(கொழும்பு)

மதுபானப் பாவனையால் விபத்துக்குள்ளாகி அரசாங்க வைத்தியசாலை களில் சிகிச்சை பெற வருவோரிடமிருந்து ரூபா 2000 கட்டணத்தை அறவிடு வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்தின் சட்ட வரையறையை அறிந்து கொள்வதற்காக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினூடாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

சட்டமா அதிபரின் அறிக்கை கிடைத்தவுடன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் தொடக்கம் இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மதுப்பாவனையால் நோய்களுக்கு உள்ளாகி அரசாங்க வைத்தியசாலை களில் சிகிச்சை பெற வருவோரிடமிருந்து கட்டணம் அறவிடும் திட்டத்தின் முத லாவது கட்டம் இதுவாகும். கட்டணம் அறிவிடுவதால் இலவச மருத்துச வேவைக்கு எதுவிதத்திலும் பங்கம் ஏற்படாதென்று தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர் இதன் மூலம் மதுப்பாவனை பழக்கத்தைக் கட்டுப்படுத்துவதே நோக்க மென்றும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இரசாயனவியல் - எமது வாழ்வு, எமது வருங்காலம்

2

### பொதுமக்களை இரசாயனவியலின் முக்கியத்துவத்தை உணரச் செய்தல்

ஒவ்வொரு பொதுமகனும் உலகத்தின் தேவைகளை பூர்த்திசெய்வதில் இரசாயனவியலானது எவ்விதத்தில் உதவுகின்றது என்பது பற்றி அறிந்திருத்தல் நன்று. இரசாயனவியல் என்றால் என்ன? அதன் தன்மைகள், அதனைப் பற்றிய அறிவு போன்றவற்றை தெரிந்து கொண்டால் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். சர்வதேச இரசாயனவியல் ஆண்டில் இரசாயன ஆர்வலர்கள் இரசாயனவியலின் விஞ்ஞானம் மற்றும் கலை, மனிதவள அறிவை மேம்படுத்துவதிலும் அதன் பொருளாதார வளத்தை அதிகரிப்பதிலும் நல்லதொரு வளமான சூழலை உருவாக்குவதிலும் அதன் பங்கு போன்றவற்றை கொண்டாடவுள்ளனர்.

சேதன இரசாயனத்தை கற்கின்ற மாணவர்களில் ஒரு பகுதியினர் சுகாதாரம் சம்பந்தமான வேலைகளைப் பெற்றுக் கொண்டாலும் இன்னொரு பகுதியினர் மருந்தாக்க தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர். இது

IUPAC இன் சின்னம்




வும் இரசாயனவியலின் ஓர்படிக் கல்லாகவே இருக்கின்றது. ஏனெனில் இத்தொழிற்சாலைகள் உயிர்காக்கும் மருந்துகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் சூழலியல் மாற்றங்களையும் கருத்தில் எடுத்து செயற்படுகின்றன. முற்று முழுதாகப் பார்த்தால் இரசாயனவியலின் தாக்கம் எங்கெல்லாம் வியாபித்து இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

### சிறுவர்கள், மாணவர்கள் மத்தியில் இரசாயனவியலுக்கான விருப்பை ஊக்குவித்தல்

இரசாயனவியல் ஆசிரியர்கள் இரசாயனவியலில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டுவதில் முக்கியபங்கு வகிக்கின்றனர். இவர்கள் மட்டுமல்லாது இரசாயனம் தெரிந்த அனைவரும் இதில் பங்கு கொண்டு வகுப்பறைகளில் மாணவர்களின் ஈடுபாட்டை குறிப்பாக ஆரம்ப வகுப்புகளில் அதாவது சிறுவயது முதற்கொண்டு அவரவர்க்கு ஏற்றவிதத்தில் இரசாயன அறிவை வளர்க்க வேண்டும். மாயாஜால வித்தைகளை இரசாயன மூலகங்கள் கொண்டு செய்தல், கையால் செய்யக் கூடிய சிறு சிறு தொழிற்பாடுகள், தேசிய இரசாயன வாரத்தைப் பிரதேசங்களில் அறிமுகப் படுத்தி செயற்படுத்துதல் போன்றவற்றின் மூலம் சிறுவர்களை இரசாயனவியல் தெரிந்தவர்களாக மாற்றவும் பிற்காலத்தில் அவர்களால் புதியவகைக் கண்டுபிடிப்புகளையும் தயாரிப்புகளையும் செய்யக்கூடியதாகவும் முடியும்.

சிறு உதாரணமாக நீரை எவ்வாறு சுத்தப் படுத்தலாம் என்பதைச் சிறுவர்களிடத்தில் செய்து காட்டலாம். பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுடைய பாடவிதானங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளைப் பொது மக்களுடன் இணைந்து பொது இடங்களிலோ பல்கலைக்கழகங்களிலோ செயற்படுத்துவதன் மூலம் பல்வேறு தரப்பினரையும் இரசாயனவியலுடன் ஒன்றிக்கச் செய்யலாம். இரசாயனத் தொழிற்சாலைகளில் உள்ளவர்கள் தங்களது உற்பத்திகளை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதனால் எதிர்காலத்தில் அவர்களை நல்லதொரு உற்பத்தியாளர்களாக உருவாக்கலாம். எனவே 2011ஆம் ஆண்டு இரசாயனவியலாளர்களுக்கு நல்லதொரு எதிர்பார்ப்புள்ள ஆண்டாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



### இரசாயனவியலின் ஆக்கபூர்வ எதிர்காலத்திற்கான ஊக்கத்தை ஏற்படுத்தல்

எமது மாணவர்களின் பொது அறிவு கூடியுள்ளதை அவதானிக்கும் அதே நேரத்தில் ஆக்கத்திறனானது எதிர்பார்க்காத அளவிற்குக் குறைந்துள்ளதைக் காணலாம். இரசாயனவியலானது ஆக்கத் திறனை ஏற்படுத்துவதற்கு ஓர் சிறந்த வழியாகும். ஏனெனில், இரசாயனவியலாளர்கள் மூலக்கூறுகளை வடிவமைக்கும் படைப்பாளிகளாவர். அதாவது தங்களது திறமைகளைப் பயன்படுத்தி வெவ்வேறு வழிகளில் புதிய உற்பத்திப் பொருட்களையோ அல்லது அவற்றை உருவாக்குவதற்கான முறைகளையோ கண்டுபிடிப் பார்கள். இன்றைய உலகின் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றி காணக்கூடிய முறையில் இவர்கள் செயற்படுவார்கள்.

மூலக்கூறு மருத்துவ அபிவிருத்தியில் புதியனவற்றைக் கண்டுபிடிப்பதிலும் உணவுக்கும் சக்திக்குமான தேவைகளுக்குப் புதியவகை மூலங்களைக் கண்டறிவதற்கும் விஞ்ஞானத்தின் ஆழ்ந்த அறிவு தேவைப்படுகின்றது. இத்துறைகளின் அபிவிருத்தியானது நவீன உலகினைத் தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்குவது இரசாயனவியலும் அதன் ஆக்குதிறனும் என்பது பலருக்குத் தெரியவில்லை. இரசாயனவியல் ஆண்டானது மக்களுக்கு ஒரு தெளிவான விளக்கத்தை அதாவது விஞ்ஞானம், மருத்துவம், தொழினுட்பம் போன்ற துறைகளாவன எவ்வாறு இரசாயனவியலுடன் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை அறிவிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

இரசாயனவியலானது விஞ்ஞானத்தின் பல்வேறுபட்ட துறைகளைத் தொட்டு நிற்கின்ற படியால் அதன் தனித்தன்மை சில சமயங்களில் அறியப்படாமல் உள்ளது.

**இவ்வாண்டானது இரசாயனவியலின் அரும்பெரும் சாதனைகளை உலகளாவிய ரீதியில் கொண்டாடும் ஆண்டாக இருக்க வேண்டும் என்று ஐ.நா.வின் 63வது பொதுக்கூட்டத்தில் ஏற்பாடாகியுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வானது பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் நேற்றும் இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றது.**

இரசாயன வியலாளர்கள் இரசாயனவியலின் அடையாளத்தைப் பேணுவதிலும் எங்கெங்கு அதன் செயற்பாடுகள் உள்ளதோ அங்கெல்லாம் அவற்றை உரக்க ஒலிக்கச் செய்வதிலும் ஈடுபட வேண்டும். இரசாயனவியலை வெறுமனே மனனம் செய்ய வேண்டிய உண்மைகளின் தொகுப்பாக இல்லாமல் ஒரு ஆக்க விஞ்ஞானமாகக் கற்பிப்பது இப்பாடப் பிரிவின் இயக்க ஆற்றலை மாணவர்கள் உணர்ந்து கொள்ள உதவும்.

## 2011 ஆம் ஆண்டானது சர்வதேச இரசாயனவியல் ஆண்டாக ஐ.நா.வினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது




மேரிகியூரி அம்மையார்

### கியூரி அம்மையாரின் நோபல் பரிசின் நூற்றாண்டு, சர்வதேச இரசாயனவியல் கழகங்கள் அமைப்பின் நூற்றாண்டு விழாக்கள்

இரசாயனவியலின் வளர்ச்சியில் மேரிகியூரி அம்மையார் முக்கிய பங்காற்றியுள்ளார். இரசாயன மூலகங்களான ரேடியம்,

போலோனியம் என்பவற்றைக்




கண்டுபிடித்தமைக்காக இரசாயனவியலுக்கான நோபல் பரிசில் 1911 ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப் பட்டது. கியூரி அம்மையார் நோபல் பரிசு பெற்றது இது முதற்தடவையல்ல. 1903ஆம் ஆண்டு கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தமைக்காக பௌதீகவியலுக்கான நோபல் பரிசை இவரது கணவரான பியர் கியூரியுடனும் ஹென்றி பெக்கியூரலுடனும் இணைந்து பெற்றுக் கொண்டார். இன்று வரையும் இவரைப் போன்ற மிகச் சிலரே இரண்டு நோபல் பரிசுகளுக்குரியவர்களாக உள்ளனர்.

லீனஸ் போலிங் (இரசாயனவியல் - 1954, சமாதானம் - 1962), ஜோன் பார்டீன் (பௌதீகவியல் - 1956, 1972), பிரெட் சங்கர் (இரசாயனவியல்-1958, 1980) ஆகியோர் மற்றைய இரட்டைப் பரிசுக்குரியவர்களாவர். கியூரி அம்மையாரின் காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது குறைவான தடைகளே பெண்கள் எதிர்நோக்கினாலும் ஒப்பீட்டளவில் 1901ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை ஒரேயொரு பெண்மணி பௌதீகவியல் பரிசினையும் வேறு மூவர் இரசாயனவியல் பரிசினையும் வென்றுள்ளார்கள். பெண்களைப் பொறுத்தவரை ஆண்களுடன் ஒப்பிடும்போது இது ஒரு குறையாகவே உள்ளது. எனவே கியூரி அம்மையாரின் இரசாயனவியலுக்கான பங்களிப்பைக் கொண்டாடுவதும் சர்வதேச இரசாயனவியல் ஆண்டின் முக்கியமானதொன்றாக விளங்குகின்றது.

இதைவிட 2011ஆம் ஆண்டானது சர்வதேச இரசாயனவியல் கழகங்களின் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டாகவும் விளங்குகின்றது. இதன் மூலம் சர்வதேச ரீதியாக இரசாயனவிலாளர்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்திச் சர்வதேச பொதுத் திட்டப் பெயரீடு, அணுநிறை, பௌதீக மாறிலிகள் போன்றன விஞ்ஞான தொடர்பாடல்களை இலகுவாக்கும் முறையில் உருவாக்கப் பட்டுள்ளது.

சர்வதேச இரசாயனவியல் ஆண்டானது இரசாயனவியலின் நடந்து முடிந்த வெற்றிகளைக் கொண்டாடுவதற்கும் எதிர்காலத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பமாகும். அதன் பயன் இரசாயனம் தெரிந்தவர்களை விடத் தெரியாதவர்களுக்கே பெரிதாகவிருக்கவேண்டும். மாணவர்கள், குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள் எனப் பலருடனும் ஒன்றுசேர்ந்து வாழ்வில் ஒருமுறையே வரக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரசாயனவியலின் முக்கியத்துவத்தை - இரசாயனவியல் எமது வாழ்வு, எமது வருங்காலம் எனும் தொனிப் பொருளோடு உலகெங்கும் பரவச் செய்வோமாக. *(முற்றும்)*

கலாநிதி யசோதா பிரபாகர்,
இரசாயனவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.




'இரசாயனவியல் - எமது வாழ்வு, எமது எதிர்காலம்' எனும் தொனிப்பொருளிலமைந்த, சர்வதேச இரசாயனவியல் ஆண்டுக்கான (2011) திட்டமிடல் சந்திப்பை அமெரிக்க இரசாயனவியல் கழகம் நடத்துவதை முதலாவது படத்திலும் பெங்களூரிலுள்ள ஜே.என்.டாட்டா கேட்போர் கூடத்தில் சர்வதேச இரசாயனவியல் ஆண்டிற்கான அங்குரார்ப்பண நிகழ்வை பெருமைக்குரிய விஞ்ஞானியும் ஆராய்ச்சியாளருமான சி.என்.ஆர்.ராவோ நிகழ்த்துவதை அடுத்த படத்திலும் காணலாம்.






யாழ்.மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினரான இளவாலை மாரீசன் கூடல் பங்குத் தந்தை அருட்திரு எம்.எம்.எச்.ஞானேந்திரன் அடிகளார் மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் சூ.நோபேட் உதயகுமார்,பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருமதி ஆர்.லூட்ஸ்பியலா ஆகியோர் அருகில் நிற்பதையும் தரம் 1 இல் இணைந்த மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## அடைமழை காரணமாக வகுப்பறைகளில் வெள்ளம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை முதல் மீண்டும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. இதனால் அங்கு வெள்ள அபாய நிலை தோன்றியுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பெய்த அடை மழையால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் குடியிருப்புகள் மற்றும் ஏனைய பகுதிகளும் பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் சில நாட்களுக்கு முன்னரே தமது குடியிருப்புகளுக்கு திரும்பியிருந்தனர்.

இந்நிலையில் மக்கள் மத்தியில் மீண்டும் அச்ச நிலைமை உருவாகியுள்ளது. கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை உட்பட ஏனைய சில பாடசாலை வகுப்பறைகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதனால் நேற்று பாடசாலை மூடப்பட்டுள்ளது.

மழையினால் சாய்ந்தமருது ஒன்பதாம் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பழைய சந்தை வீதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

## மோசடியான தொழில்வாய்ப்பு, லொத்தர் அறிவிப்புக்கள் குறித்து பிரி. உயர்ஸ்தானிகராலயம் எச்சரிக்கை

(கொழும்பு)

மோசடியான தொழில்வாய்ப்பு, லொத்தர் வெற்றி அறிவிப்புகள் குறித்து கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் ஊடக அறிக்கையொன்றின் மூலம் பொது மக்களை எச்சரித்துள்ளது.

லொத்தர் மற்றும் தொழில்வாய்ப்பு மோசடிகள் உலகெங்கும் அதிகரித்து வருவதாக தோன்றுகிறது. இல்லாத தொழில் வாய்ப்பு மற்றும் லொத்தர் வெற்றி அறிவிப்புகள் மூலம் பெரும் எண்ணிக்கையானோர் ஏமாற்றப்படுகின்றனர் என்பதே துயரமான உண்மையாகும்.

வருடாந்தம் 30 இலட்சம் பேர் மோசடியால் பாதிக்கப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

சராசரியாக 850 ஸ்ரேலிங் பவுண்களை ஒவ்வொருவரும் இழக்கின்றனர். சில வேளை இதைவிட அதிகமாகவும் இழக்கின் றனர் என பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின் அஞ்சல்கள் மற்றும் வேறு வழிகளில் பிரித்தானிய தொழில் வாய்ப்பு மற்றும் லொத்தர் வெற்றி குறித்த அறிவிப்புகள் குறித்து இலங்கை மற்றும் மாலைதீவைச் சேர்ந்த மக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு கிடைத்துள்ளதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்ல விடயங்கள் பலவற்றிற்கு உறுதியளிக்கும் மோசடியான தொழில் வாய்ப்பு மற்றும் லொத்தர் அறிவிப்புகள் மின்னஞ்சல்கள் மூலம் கேட்காமலேயே அனுப்பப்படுகின்றன.

இந்த மின் அஞ்சல்கள், பல மோசடி அறிவிப்புகள் பிரிட்டனில் இருந்து வெளியாகுவது போல் தென்பட்டாலும் இக் கிரிமினல்கள் உண்மையில் வேறு நாடுகளில் இருந்தே செயற்படுகின்றனர்.

உண்மையான பிரித்தானிய லொத்தர் திட்டங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இணையத்தளங்களையும் கொண்டுள்ளன.

பிரித்தானிய லொத்தர்கள் வெளிநாடுகளில் உள்ள தனி நபர்களால் அவர்கள் பிரித்தானிய பிரஜைகளானால் கூட விளையாடப்பட முடியாதவையாகும். பிரிட்டன் தொழில் மற்றும் முதலீட்டுத்துறை உட்பட பிரித்தானிய அரசாங்கம் வேண்டாப் பெறாத மின்னஞ்சல்களை தானாக அனுப்புவதில்லை என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

## நீதியாக தேர்தல் நடத்தி கௌரவமாக ஓய்வுபெறுங்கள்

### தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

நீதியானதும் நியாயமானதுமான முறையில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது. இதன் மூலம் அவர் கௌரவமாக ஓய்வு பெற முடியும் என. ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இம்முறை நீதி, நியாயமாக தேர்தலை நடத்துவதன் மூலம் தேர்தல் ஆணையாளர் கடந்த காலங்களில் ஏற்பட்ட கறைகளை நீக்கிக் கொள்ள முடியும் என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## யாழ். மாநகர முதல்வரின் வாகனம் விபத்துக்குள்ளானதில் செயலர் படுகாயம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை முதல்வரின் உத்தியோகபூர்வ வாகனம் நேற்று அதிகாலை 12.50 மணியளவில் கைதடிப் பாலத்தில் விபத்துக்குள்ளானது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த குறித்த வாகனம் கைதடிப் பாலத்தில் சறுக்குண்டத்தில் பாலத்தின் இரும்புக் கேடருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தின் போது மாநகரமுதல்வர் அவ் வாகனத்திற்குள் இருக்கவில்லை. அதில் பயணம் செய்த முதல்வரின் செயலாளர் பற்குணராஜா மற்றும் வாகனச்சாரதி ஜெயரட்ண ஆகியோர் காயங்களுக்கு உள்ளாகினர்.

அத்தோடு வாகனத்தில் பயணித்த பொலிஸார் ஒருவரும் சிறுகாயங்களுக்கு உள்ளானார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் ஆணையாளரின் பிக்கப் வாகனமும் கொழும்பு சென்றுவரும் போது பளைப் பகுதியில் விபத்துக்குள்ளாமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-4-51)

## வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(அல்வாய்)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தினால் வடமராட்சிப் பகுதியில் உள்ள 15 பாடசாலைகளில் வறுமைக் கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

புலோலி உபய கதிர்காமம் பகுதியில் அமைந்துள்ள சிறுவர் கிராமத்தில் இருந்து புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் 45 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை தேவஸ்தான சபைத் தலைவர் இ.அன்னலிங்கம் வழங்கி வைத்தார்.

மேலும் இப்பாடசாலையில் விசேட தேவையுள்ள 5 மாணவர்களுக்கு உதவி புரிவதாக அவர் உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-2-19)

## மனோகணேசன், சதாசிவம் தலைமையில் மலையக தமிழ் கூட்டமைப்பு உருவாக்கம்

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தின் ஐந்து பிரதேச சபைகளிலும் இரண்டு நகரசபைகளிலும் போட்டியிடும் முகமாக மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும் எஸ்.சதாசிவம் தலைமையிலான இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணியும் இணைந்து மலையக தமிழ் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

அம்பகமுவபிரதேச சபை, ஹங்குரன்கெத்த பிரதேச சபை, ஹற்றன் டிக்கோயா நகர சபை, தலவாக்கலை, லிந்துல்லை நகரசபை ஆகியவற்றில் ஏணி சின்னத்திலும் நுவரெலியா பிரதேச சபை, கொத்மலை பிரதேச சபை, வலப்பளை பிரதேச சபை ஆகியவற்றில் மீன் சின்னத்திலும் இந்த மலையக தமிழ் கூட்டமைப்பு போட்டியிடுமென இக்கூட்டமைப்பின் தலைவர்களான மனோகணேசனும் எஸ்.சதாசிவமும் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினமும் நேற்றும் நுவரெலிய மாவட்ட செயலகத்தில் இந்த உள்ளூரட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை ஜனநாயக மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் கலாநிதி குமரகுருபரனும் இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் எஸ். சதாசிவமும் கையளித்தனர்.

இந்தக் கூட்டமைப்பில் நவசமாஜ கட்சி சார்பாக ஒரு வேட்பாளரும் அம்பகமுவ பிரதேச சபைக்காக போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## லண்டனில் கோடிக்கணக்கான பணம் மோசடி செய்த இலங்கையருக்கு சிறை

(கொழும்பு)

வைப்புப் பணத்திற்கு அதிகூடிய வட்டி தருவதாக வாக்களித்து லண்டனில் கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்த இலங்கையர் ஒருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறுகிய கால வைப்புத் தொகைகளுக்கு நூற்றுக்கு நாற்பத்தி எட்டு வரை உச்ச வட்டி வழங்குவதாகக் கூறி ஆறு பேர் கொண்ட குழுவொன்றை லண்டனில் ஒரு கோடி பவுண்களை அதாவது நூற்றி எழுபத்தாறு கோடி ரூபாவை மோசடி செய்துள்ளது.

அதன் தலைவராக இலங்கைச் சேர்ந்த விபவ பொன்சேகா என்பவர் செயற்பட்டுள்ளார். அவரின் கீழ் இன்னும் இரண்டு இலங்கையரும் ஒரு பாகிஸ்தானியரும் இரண்டு வெள்ளையரும் செயற்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி கறுப்புப் பணத்தை சட்டபூர்வமான பணமாக்கிக் கொடுக்கும் நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். அண்மையில் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

லண்டனில் வாழ்ந்த இலங்கையர்களான சமந்த கோரளகே மற்றும் உபுல் டி சொய்ஸா ஆகியோருடன் விபவபொன்சேகாவுக்கும் தற்போது சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கர்களான வெள்ளையர்கள் இருவருக்கும் எதிராக வழக்கு நிலுவையிலுள்ளது.

(ஸ்ரீ-2)

# எகிப்து ஜனாதிபதியை எதிர்த்து நாடு முழுவதும் கலவரம்

## துப்பாக்கி சூட்டில் மூவர் பலி

(எகிப்து)

எகிப்து நாட்டில் 30 ஆண்டுகளாக ஜனாதிபதி முபாரக் சர்வாதிகார ஆட்சி நடத்தி வருகிறார். எகிப்தில் விலைவாசி உயர்வு அதிகமாக உள்ளது. வேலையில்லா திண்டாட்டம் தலை விரித்தாடுகிறது. இதனால் அந்நாட்டு ஜனாதிபதி மீது கடும் அதிருப்தி நிலவுகிறது. அவர்கள் இப்போது ஜனாதிபதிக்கு எதிராக தெருவில் இறங்கி போராடி வருகின்றனர்.

எகிப்தின் அயல்நாடான துனிசியாவில் அந்த நாட்டு ஜனாதிபதிக்கு எதிராக நடந்த போராட்டத்தால் அவர் நாட்டை விட்டு ஓடி விட்டார். அங்கு நடந்த சம்பவம் எகிப்து மக்கள் மனதிலும் எதிரொலித்து இருக்கிறது. எனவே துனிசியா ஜனாதிபதியை போல எகிப்து ஜனாதிபதியையும் பதவியை விட்டு விலக வைக்க வேண்டும் என தீவிர போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தலைநகரம் கெய்ரோ, சூயஸ் மச்சாலா , அலெக்சான்டிரியா உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் கலவரம் வெடித்துள்ளது. சூயஸ் நகரில் அருங்காட்சி அலுவலகம் மற்றும் அரசு கட்டடங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. கலவரத்தை ஒடுக்க பொலிஸார் பல இடங்களில் துப்பாக்கி சூடு நடத்தினார்கள்.

இதில் 3 பேர் கொல்லப்பட்டனர். 19 பேர் காயம் அடைந்துள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.


இதுவரை 700 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். போராட்டம் தீவிரம் அடைந்ததால் அந்நாட்டு ஜனாதிபதி பதவியை இழக்க வேண்டி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# நெல்சன் மண்டேலா மருத்துவமனையில் அனுமதி

தென் ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இது வழக்கமான மருத்துவ பரிசோதனைதான். அவரது நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தனர்.

இனவெறிக்கொள்கையினை எதிர்த்து போராடிய சிறை சென்ற நெல்சன்மண் டேலா (வயது 92) கடந்த சிலமாதங்களாக பொது மக்களை சந்திப்பதை தவிர்த்து வந்தார். உடல் நிலை காரணம் எனக் கூறப்பட்டு வந்த போதிலும் கடந்தாண்டு நடந்த உலகக் கோப்பை கால் பந்து போட்டியின் நிறைவு நாள் நிகழ்ச்சியின் போதுதான் கடைசியாக பொதுமக்களைச் சந்தித்தார். அதன் பின் கேப்டவுணில் உள்ள தனது இல்லத்தில் தான் வசித்து வந்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதாகவும்,இதனால் கேப்டவுண் நகரிலிருந்து ஜோஹன் ஸ்பெர்க் நகரில் உள்ள ஒரு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ)



புதிதாக உருவாக உள்ள தெற்கு சூடானின் ஜனாதிபதி சல் வாகிர் மயார்டிட் (இடது) தலைநகர் ஜூபாவிற்கு வருகை தந்த மலாவி ஜனாதிபதி பிங்கு வாமுதாரிகாவை வரவேற்பதை படத்தில் காணலாம்.

# நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 21 பேர் பலி



கொலம்பியா நாட்டில் உள்ள சான்டன்ஸ்டர் என்ற இடத்தில் நிலக்கரி சுரங்கம் அமைந்துள்ளது. அங்கு நிலக்கரியை வெட்டி எடுக்கும் பணி நடந்து கொண்டிருந்தது. மின்சார கருவிகள் மூலம் அவற்றை வெட்டி எடுத்தனர். இதில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சுரங்கத்தில் இருந்து திடீரென மெதேன் வாயு கசிந்தது. இதனால் அதில் தீப்பற்றி பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் சுரங்க ஊழியர்கள் சிக்கி தீப்பற்றி பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதில் சுரங்க ஊழியர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்களில் 21 பேர் வெடிவிபத்தில் சிக்கி உயிர் இழந்தனர்.

20 இற்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அங்கு மீட்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. அந்த சுரங்கத்தை உடனடியாக மூடும்படி கொலம்பியா அரசு உத்தரவிட்டுள்ளது. இதே சுரங்கத்தில் 2007 ஆம் ஆண்டு வெடிவிபத்து ஏற்பட்டு 30 பேர் பலியானார்கள். கடந்த ஜூன் மாதம் அமேகா என்ற இடத்தில் நடந்த சுரங்க விபத்தில் 70 பேர் பலியானார்கள். (ஸ்ரீ-2)

# ஆயிரம் இந்திய மாணவர்கள் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சான் பிரான்சிஸ்கோ புறநகர் பகுதியில் உள்ள பிலி சன்டே சனில் தி டிரை-வேலி பல்கலைக்கழகம் உள்ளது. இங்கு ஆயிரத்து 555 மாணவர்கள் படிக்கின்றனர். இவர்கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 95 சதவீதம் பேர் இந்தியர்கள். இவர்கள் பெரும்பாலும் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் தங்களின் விசா அனுமதியை தவறாக பயன்படுத்துவதாகவும் போலி குடியுரிமை சான்றிதழ் வழங்கி அதன் மூலம் பண மோசடி மற்றும் பல குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் புகார்கள் வந்தன. இது குறித்து கலிபோர்னியா நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இதைத் தொடர்ந்து கடந்த வாரம் அந்த பல்கலைக்கழகத்தில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது. தற்போது அப்பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. தவறான நடவடிக்கைகளில் ஈடுபட வெளிநாட்டினருக்கு உதவியாக அந்த பல்கலைக்கழகத்தின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே அங்கு படிக்கும் இந்திய மக்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது இந்திய மாணவர்களிடையே பீதியையும் குழப்பதையும் ஏற்படுத்தியுள்ளது. இருந்தாலும் பல மாணவர்கள் இந்தியா திரும்ப முடிவு செய்துள்ளனர். (ஸ்ரீ-2)

# துனிசிய ஜனாதிபதிக்கு எதிராக சர்வதேச பிடியாணை உத்தரவு

(டூனிஸ்)

துனிசியா நாட்டில் ஏற்பட்ட கலவரத்தினால் நாட்டை விட்டு தப்பி ஓடிய ஜனாதிபதி பென் அலிக்கு எதிராக சர்வதேச பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வட ஆபிரிக்காவில் உள்ள துனிசியா நாட்டின் ஜனாதிபதியாக 23 ஆண்டுகள் பென் அலி ஆட்சியில் இருந்தார். இந்நிலையில் துனிசியாவில் வேலையில்லா திண்டாட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் அவருக்கு எதிராக தொடர்போராட்டங்களை நடத்தினர். இதனால் ஜனாதிபதி பென் அலி நாட்டை விட்டு வெளியேறி சவுதி அரேபியாவிற்கு ஓட்டம் பிடித்தார். தற்போது அங்கு தஞ்சமடைந்துள்ளார். அவரை கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக துனிசியா நீதித்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இதற்கிடையே அவரது மனைவி குடும்பத்தினர் முறைகேடுகளில் ஈடுபட்டு ஏராளமான சொத்துக்களை குவித்தனர் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. (ஸ்ரீ)


# தெற்கு சூடான் தனிநாடு பெப்ரவரி 14 இல் உதயம்

ஆபிரிக்க நாடான சூடான் இரண்டாகப் பிரிக்கப்படுவது குறித்த மக்கள் வாக்கெடுப்பு முடிபுகள் பெப்ரவரி 7 ஆம் திகதி வெளியிடப் படவுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் கடந்த 20 ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப் போர் முடிபுக்கு வந்தபின் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்தின்படி சூடானை தெற்கு,வடக்கு என இரண்டாகப் பிரிக்க முடிவு செய்யப்பட்டது. பின்னர் நிகழ்ந்த பல்வேறு அரசியல் மாற்றங்களுக்குப் பின்னர் கடந்த ஜனவரி மாதம் மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. முன்னதாக சூடானை இரண்டாகப் பிரிக்கலாமா , வேண்டாமா என வாக்கெடுப்பு நடந்தது. இதில் பெரும்பாலான மக்கள் சூடானைப் பிரிக்க ஆதரவு தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தெற்கு சூடான் மக்களுக்கான வாக்கெடுப்பு ஆணையகம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையகம் கடந்த ஜனவரி மாதம் வாக்கெடுப்பு நடத்தியது. மொத்தம் 99 சதவீதம் வாக்கெடுப்பு நடந்துள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் அதன் தலைவர் முகமது இப்ராஹிம் கஹா கிலி கூறுகையில்,

வாக்கெடுப்பு முடிவுகள் பெப்ரவரி 7 ஆம் திகதி அதிகாரபூர்வமாக வெளியிடப்படவுள்ளன. அதற்கு முன் ஜனாதிபதி ஓமர் பஷீர் சூடானை இரண்டாக பிரிக்கும் வாக்கெடுப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளார். இதன்படி தெற்கு சூடானின் தலைநகரமாக கஹார்டூம் வடக்கு சூடானின் தலைநகரமாக ஜூபாவும் முறையாக அறிவிக்கப்படும். இதனைத் தொடர்ந்து பெப்ரவரி 14 ஆம் திகதி இறுதி முடிவுகள் வெளியிடப்பட்டு அன்று முதல் தெற்கு சூடான் என்ற சுதந்திர நாடு உதயமாகும். இவ்வாறு அவர் கூறினார். (ஸ்ரீ-2)



ஜெனிவாவில் நடைபெற்ற மகளிர் மற்றும் குழந்தைகள் நல கருத்தரங்கில் (இடமிருந்து வலமாக) உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் சீனாவின் மார்கரெட் சான் தான்சானியா ஜனாதிபதி ஜகாயா கிட்வேட்டி, ஐ.நா. பொது செயலாளர் பான் கீ மூன், கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

முட்டாள், பேசவேண்டிய இடத்தில் அமைதியாய் இருப்பான். அமைதியாய் இருக்க வேண்டிய இடத்தில் பேசுவான். -ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சொன்னது நீ தானா... சொல்...சொல்...சொல் ஹெய்மே சொல்

இலங்கை அரசாங்கத்திற்கும் புலம்பெயர் தமிழர்களுக்குமிடையே மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என நோர்வேயின் அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசை உருவாக்கியுள்ளவர்களுக்குமிடையே பேச்சு வார்த்தை நடத்துவதற்கான பங்களிப்பைத் தான் ஆற்றமுடியும் என எரிக் சொல்ஹெய்ம் கூறியிருப்பது தமிழ் மக்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கும் என்பதில் ஐயமில்லை.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை இடம் பெற்றபோது நோர்வேயின் அனுசரணைப்பணியில் எரிக் சொல் ஹெய்ம் சிறப்புத் தூதுவராக செயற்பட்டார்.

அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளை யும் பேச வைப்பதில் அவர் கடுமையாக உழைத்தார் என்பதில் இருவேறு கருத்துக்கு இடம் இல்லை.

எரிக் சொல்ஹெய்ம் சிறப்புத் தூதுவராக செயற்பட்ட காலத்தில் ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் அவரைக் கடுமையாக விமர்சித்தன.

இலங்கை நாடாளுமன்றத்தில் அவரின் தனிப்பட்ட விடயங்களைக் கூட பிரஸ்தாபிக்கும் அளவுக்கு எரிக் சொல்ஹெய்முக்கான எதிர்ப்பு தென்பகுதியிலிருந்தது.

அதேநேரம் பேச்சுவார்த்தை மூலம்-சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்கும் எரிக் சொல்ஹெய்முக்கு தமிழ் மக்கள் தங்கள் மானசீகமான ஆதரவை வழங்கினர்.

குறிப்பாக வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளை அவர் சந்தித்தபோதெல்லாம் அவர் மீது வன்னி பெரு நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர்.

துரதிர்ஷ்டவசமான பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றன. அதுவரை எரிக் சொல்ஹெய்ம் நடந்து கொண்டமை திருப்தியானவை; ஏற்புடையவை.

ஆனால் வன்னியில் போர் நடந்தபோது, தமிழ் மக்கள் யுத்தத்தில் சிக்கி தங்களை காப்பாற்றிக் கொள்ள முடியாமல் கையேந்திய போது எரிக் சொல்ஹெய்ம் மௌனமாக இருந்தாரே. அது மகாதவறு. மன்னிக்க முடியாத பாவம்.

நோர்வேயின் நடுவீதியில் நின்று ஈழத்தமிழர்களைக் காப்பாற்றுங்கள் என எரிக் சொல்ஹெய்ம் கூக்குரலிட்டிருக்க வேண்டும். அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும், இந்தியாவுக்கும் ஓடி ஓடிச்சென்று ஐயா... வன்னியில் தமிழ் பொதுமக்கள் படும் துன்பம் கொடூரமானது. அவர்களைக் காப்பாற்றுங்கள் எனக் கேட்டிருக்கவேண்டும்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையில் சிறப்புத் தூதுவராக கடமையாற்றிய எரிக் சொல்ஹெய்மிடம் தமிழ்மக்கள் இதனையே எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் எரிக் சொல்ஹெய்ம் மௌனத்தையே கடைப் பிடித்தார். அத்தகைய ஒருவர் இப்போது அரசுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயார் என சொல்லியிருப்பது அவர் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

அவர் எங்களுக்காக ஏதேனும் செய்யவிரும்பினால் இலங்கை அரசிடம் மட்டும் பேசட்டும். இனப்பிரச்சினையை தீர்க்குமாறு...

# முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. போட்டியிடவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐ.ம.சு முன்னணி போட்டியிடவில்லை. வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச சபைகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஐந்து அரசியல் கட்சிகளும் 3 சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கென மொத்தமாக 5 சுயேட்சை குழுக்கள் வேட்பு மனுதாக்கல் செய்திருந்த போதிலும்,

அவற்றில் இரண்டு சுயேட்சைக் குழுக்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜே.வி.பி.ஆகிய 3 3 கட்சிகளும்வவுனியாமாவட்டத்தில்உள்ள 4பிரதேசசபைகளிலும்போட்டியிடுகின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேசசபை ஆகிய 3 பிரதேச சபைகளில் போட்டியிடுகின்றது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வவுனியாவில் தனித்து வெங்கலச் செட்டிக்குளம், வவுனியா தெற்கு தமிழ் பிரிவு ஆகிய 2 பிரதேச சபைகளிலும் போட்டியிடுகின்றது.

இதில் இரண்டு சுயேட்சைக்குழுக்களின் வேட்பு மனுக்களும் தேர்தல் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

7கட்சிகளும் ஒரு சுயேட்சைக் குழுவும் களத்தில் இறங்கியுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிரங்காவின் தலைமையிலான பிரஜைகள் குழுவின் ஒரு வேட்பு மனுவும் சுயேட்சைக் குழு ஒன்றின் மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய 4 பிரதேச சபைகளிலும் 7அரசியல் கட்சிகளும் இருளன் ஜெயந்தியின் தலைமையிலான சுயேட்சைக் குழுவும் போட்டியிடுகின்றன.

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்த முஸ்தபா ஜெஸ்லியின் தலைமையிலான சுயேட்சைக் குழுவின் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிரங்காவின் தலைமையிலான பிரஜைகள் குழு நான்கு பிரதேச சபைகளுக்கும் வேட்பு மனு தாக்கல் செய்திருந்த போதிலும் துணுக்காய் பிரதேச சபைக்கான அதன் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பிரஜைகள் குழு மூன்று பிரதேச சபைகளில் போட்டியிடுகின்றது.


இலங்கைத் தமிழரசுக் கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் நான்கு பிரதேச சபைகளில் போட்டியிடுகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு ஆகிய 3 பிரதேச சபைகளில் போட்டியிடுகின்றது.

ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடுகின்றன.

நவசமசமாஜ கட்சி புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் களமிறங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### கேட்டதும் தரமாட்டார் கடவுள்

சிவபெருமானை சந்தித்தான் ஒரு மனிதன்.

"சுவாமி, பத்து இலட்சம் ஆண்டுகள் என்பது உங்கள் கணக்கில் எப்படி?" என்றான்.

"ஒரு விநாடி" என்றார் சிவன்.

"சரி, எங்கள் பூலோகத்தில் பத்து கோடி ரூபாய் என்பது உங்கள் கணக்கில் எப்படி?" என்றான்.

"ஒரு ரூபாய்".

"அப்படியா... சந்தோஷம் சுவாமி.நீங்கள் எனக்கு உங்கள் கணக்கில் ஒரு ரூபாய் தாருங்களேன்" என்று கைநீட்டினான் மனிதன்.

"தருகிறேன், என் கணக்கில் ஒரு விநாடி கழித்து வா" என்று அனுப்பி விட்டார் சிவன்.

மனிதன் கடவுளிடம் தான் கேட்பதெல்லாம் உடனே நடந்துவிட வேண்டும் என நினைக்கிறான். ஆனால், அவரவர் விதிப்படிதான் எதுவும் நடக்கும்.

## விளையாட்டு விழா

யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மாதவகுமரன் மற்றும் வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக அவுஸ்திரேலிய பொறியியலாளர் எஸ்.குகநேசன், கௌரவ விருந்தினராக இப்பாடசாலையின் பழைய மாணவியும் யாழ்.தொழில் நுட்ப உத்தியோகத்தருமான திருமதி வேணி பபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஸ்ரீ-2)

# வெள்ளி நற்சிந்தனை

04

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

உலக இன்பங்களையெல்லாம் அனுபவிக்க வேண்டுமென இன்று எண்ணுபவர் பலர் உளர். இவர்களை ஒத்தவர்களாகத் தேவர்களைக் காட்டுகிறார் மணிவாசகர். இறப்பு நேரும் என்பதை உணர்ந்தும் முன்னாளில் தக்கனாற் செய்யப்பட்ட வேள்வியில் அவியாக ஓமம் செய்த ஆட்டின் ஊனைத் தின்றவர்கள் தேவர்கள். பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய நஞ்சினைக் கண்டு அஞ்சி 'இறைவா எங்களுக்கு அருள்செய்' என ஓலமிட்டவர்கள். சிவனையும் தம்மோடு சேர்த்து மூவராவோம் என எண்ணி விண்ணுலகத்தை ஆண்டு மண்ணுலகத்திலே தாமே முழுமுதற் கடவுளாவோம் எனச் செருக்குற்ற மனத்தையுடையவர். திரிவுபடும் தவத்தையுடைய அவர்கள் அறியாமையுடையவர்கள்.

இங்கு சாவுக்கு அஞ்சும் தேவர்களும் எம்மைப் போன்றவரே என மணிவாசகர் எண்ணுகிறார். இதனை நாவுக்கரசரும் குறிப்பிட்டுள்ளார்.

"வடகெழு மலைமத்தாக வானவ
ரசுரரொடு
கடைந்திட வெழுந்த நஞ்சங் கண்டு
பஃறேவரஞ்சி"(65:2)

என அவர் குறிப்பிட்டுள்ளார். 'அவிதா' என்பது துன்பம் நேர்ந்தபோது இறைவனை நினைந்து ஓலமிடும் ஓர் ஓலச் சொல்லாகும். எனவே, எம்மைப் போல உயிர்விடுவதற்கு அஞ்சும் தேவருடைய இன்ப வாழ்வை நாம் பெற விரும்புவது பயனற்றது என்பதே மணிவாசகர் கருத்தாகும். தேவருக்குப் பெருமை எதுவுமில்லை. செருக்கு மட்டுமே உண்டு. அவர்களைப் போல மண்ணுலகிலும் பலருளர்.

பிரமவிட்டுணுக்களால்விண்ணுலகில் ஒவ்வோர் உலகம் ஆட்சி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. அவர்கள் மண்ணுலகில் தம்மைப் பரம்பொருளாகக் கருதி இறுமாந்துள்ளனர். இத்தகைய அறியாமை அவர்களுடைய தீவினைப் பயனால் ஏற்பட்டது. எனவே, அவர்கள் தவம் செய்தவர்களென நாம் எண்ணுவதும் பயனற்றது. தவம் இருவகைப்படும். ஒன்று பயன்கருதாது நோற்கும் தவம். மற்றது பயன் கருதி நோற்கும் தவம். நீத்தோர் பயன்கருதாது தவம் செய்பவராதலால் திரிவு படாத தவம் செய்பவராவர். தேவர்களில் பயன் கருதிநோற்கும் நிலை உண்டு. அதனால் துன்பங்களேவரும். தேவர்குறை காணும் மணிவாசகர் தெளிவான அறிவுடன் செயற்படுபவராக உள்ளார். தன்னுடைய குறையையும் காணும் பக்குவம் பெறுகிறார். பிறரிடம் குறை கண்டவிடத்துத் தன்குறையை எண்ணுபவரே பெரியோராவர்.

இத்தகையதொரு சுயவிமர்சனம் செய்யும் மனப் பக்குவம் மனிதனுக்கு மிகவும் அவசியமானது. தன்குறைகளைத்தானே கண்டு அதைப் போக்க முயலும் மனப்பக்குவம் எல்லோர்க்கும் வேண்டும். மணிவாசகர் தான் வாழ்வில் செய்த தவறுகளை எண்ணிப் பார்த்து தனது செயற்பாடுகளை மாற்றிக் கொண்டவர். அதையே எல்லோரும் உணர்ந்து செயற்பட வேண்டுமென விரும்புகிறார். அதனாலே தேவர்குண இயல்புகளை எடுத்துக் கூறி எம்மை ஆழ்ந்த சிந்தனை வயப்படுத்துகிறார். அவருடைய வழிகாட்டல் காலத்திற்கு ஏற்றதாகவுள்ளது. அவர் பயன்படுத்தும் சொற்கள் இதற்குச் சான்றாகவுள்ளன.

"சாவமுன் னாள் தக்கன் வேள்வித்
தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா
விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடு
மெண்ணிவின் ணாண்டுமண்மேற்
றேவரென் றேஇறு மாந்தென்ன
பாவந் திரிதவரே"

# மாற்று ஆட்சியினாலேயே மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும்

## ஜெயலலிதா தெரிவிப்பு

(வேதாரண்யம்)

மாற்று ஆட்சி ஏற்பட்டால் தான் மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி இலங்கை கடற்படையால் நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஜெயக்குமார் கொல்லப்பட்டார்.

அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி நிதியுதவி வழங்க அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா நேற்று முன்தினம் சென்னையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் வேதாரண்யம் முன்னாள் ஆசிரியர் பயிற்சி பாடசாலை மைதானத்தில் காலை 10.45 மணிக்கு வந்து இறங்கினார்.

அங்கிருந்து காரில் புறப்பட்ட ஜெயலலிதாவுக்கு கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள், மீனவர்கள் வரவேற்பு அளித்தனர். 11.25 மணிக்கு புஷ்பவனம் கிராமத்துக்கு வந்தார். அங்கு கிராமமக்கள் வரவேற்பு வழங்கினர். பின் இலங்கை கடற்படையால் கொல்லப்பட்ட ஜெயகுமாரின் குடும்பத்தார் அவரது குழந்தைகளுக்கு ஆறுதல் கூறி ஒரு இலட்சம் ரூபாயை வழங்கினார்.

அதன்பின்னர் ஜெயலலிதா கூறியதாவது, இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை தொடர்ந்து தாக்குவதும் சுட்டுக் கொல்வதற்கும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட ஜெயக்குமார் குடும்பத்தினர், அ.தி.மு.க உறுப்பினர்கள். அந்த குடும்பத்தினரை பாதுகாக்க வேண்டியது என் கடமை . ஜெயக்குமாரின் குழந்தைகள் பூமிகா, ஜனனி ஆகியோரின் படிப்புச் செலவை அ.தி.மு.க.வே ஏற்கும். பணம் குவிப்பதிலேயே தி.மு.க. அக்கறை செலுத்துகிறது. பதுக்கல் கடத்தலை ஊக்குவித்து விலைவாசி உயர்வதற்கு, தி.மு. க. அரசு காரணமாக உள்ளது. உயிரை பணயம் வைத்து மீனவர்கள் தொழில் செய்கின்றனர்.

மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க வழி தெரியாவிட்டால் பிரதமர் மன்மோகன் சிங் இராஜினாமா செய்யலாம். இந்தியாவின் படைப் பலத்தைக் கண்டு உலக நாடுகள் அனைத்தும் அச்சப்படுகின்றன. ஆனால் சிறிய நாடான இலங்கை மட்டும் அச்சப்படாதது ஏன் என்று தெரியவில்லை.



மத்திய அரசு வலிமை இல்லாததே இதற்கு காரணம். கச்சதீவை நாம் மீட்டாக வேண்டும். இதற்காக உயர் நீதிமன்றில் வழக்கு தொடுத்துள்ளோம். அதன்முடிவுதெரியும் பட்சத்தில் இப்பிரச்சினைகளுக்கு நிரந்த தீர்வு ஏற்படும். மத்திய மாநில அரசுகள் மக்கள் விரோத சக்திகளாக விளங்குகின்றன. மாற்று ஆட்சி ஏற்பட்டால் தான் மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும். இவ்வாறு ஜெயலலிதா கூறினார். (ஸ்ரீ)

## நித்யானந்தா ஆச்சிரமத்தில் ரஞ்சிதாவுக்கு புதிய பதவி

நடிகை ரஞ்சிதா நித்தியானந்தா ஆசிரமத்தில் மீண்டும் நெருக்கமாகியுள்ளார். தொலைக்காட்சியில் ஆபாச படம் வெளியானதும் நித்தியானந்தாவுக்கு எதிராக அவரை திருப்ப முயற்சிகள் நடந்தன. நித்தியான்ந்தா பலாத்காரம் செய்ததாக வாக்குமூலம் பெற பொலிஸ் தீவிரம் காட்டியது. ஆனால் ரஞ்சிதா தலைமறைவாக இருந்ததால் அது ஈடேறவில்லை.

அவர் நித்யானந்தாவுக்கு ஆதரவாக இருக்கிறாரா எதிராக உள்ளாரா என்பதில் மர்மம் நீடித்தது. இந்த நிலையில் திடீரென்று நீதிமன்றில் ஆஜராகி வீடியோ படம் போலியானது என்று அதை வெளியிட்ட லெனின் கருப்பன் மீது வழக்கு தொடர்ந்து நித்தியானந்தா பக்கம் இருப்பதை உறுதி செய்தார்.

அதன்பின் பெங்களூரில் உள்ள நித்தியானந்தாவின் பிடதி ஆச்சிரமத்துக்கு அதிரடியாக சென்றார். இந்த நிலையில் இரு தினங்களுக்கு முன்பு ஆச்சிரம சீடர்களுடன் ஏழைகளுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சியொன்றில் பங் கேற்றார். ஆசிரம பணிகளில் முன்பை விட தீவிரமாக ஈடுபடுவதாக கூறப்படுகிறது. ரஞ்சிதாவுக்கு நித்தியானந்தா ஆசிரமத்தில் முதன்மை சீடர் பதவி வழங்கப்படலாம் என பேச்சு அடிபடுகிறது. (ஸ்ரீ)

## மூன்றடி மணமகனுக்கும் இரண்டடி மணமகளுக்கும் திருமணம்

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே சிறு தொண்டமாதேவி கிராமத்தை சேர்ந்த இளையபெருமாள் மகன் ஞானஜோதி வயது (27) ஆகும். இவரது உயரம் 3 அடி மட்டுமே. இவருக்கு திருமணம் செய்ய பெற்றோர் பெண் பார்த்தனர். அப்போது புலவன் குப்பத்தை சேர்ந்த சுப்பராமன் மகள் சங்கீதாவும் வயது (21) உயரம் குறைந்தவர் என்ற தகவல் கிடைத்தது.சங்கீதா 2.5 அடி உயரம் உடையவர்.

இவர்கள் இருவருக்கும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நிச்சயதார்த்தம் செய்யப்பட்டு திருமண நாள் குறிக்கப்பட்டது. அதன்படி பண்ருட்டி அருகே காடாம்புலியூரில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் திருமணம் கோலாகலமாக நடந்தது.

மணமக்கள் மணமேடைக்கு வந்தனர். மந்திரங்கள் ஓத மேள்வாத்தியங்கள் முழங்க மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டினார். இதில் உறவினர்கள், நண்பர்கள்உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

திருமணம் முடிந்து மணமக்கள் கூறியதாவது, எங்களுக்கு திருமணமாகும் என்ற நம்பிக்கையே இல்லை. 10 ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளோம். எங்கள் உயரத்திற்கேற்ப நாங்கள் ஒன்றுசேர்ந்திருப்பது கடவுளின் அருள் என்று தான் சொல்லவேண்டும். வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டுவோம்.



கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு சந்தோஷமாக வாழ்வோம்.எங்கள் உயரம் மட்டும் தான் குறைவானது. எங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தை மிகவும் உயரமாக்குவோம். எங்களுக்கு அரசு ஏதேனும் உதவி செய்தால் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக முன்னேறி வாழ்ந்து காட்டுவோம் என கூறினார். (ஸ்ரீ-2)

## அரசியலுக்கு வந்தால் ஊழலை எதிர்ப்பேன்

### நடிகர் விஜய் பேட்டி



நடிகர் விஜய் அரசியலுக்கு வருவது உறுதி என்று அவரது தந்தை இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர் கூறியுள் ளார். ரசிகர்களும் விஜயிடம் அரசியலில் ஈடுபட வற்புறுத்தி வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா படத்துடன் விஜய் படத்தையும் இணைத்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. எனவே தேர்தலில் அ.தி. மு.க.வுக்கு ஆதரவாக பிரசாரத்தில் குதிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து விஜயிடம் கேட்டபோது அவர் கூறியதாவது,

ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையிலும் ஒரு பயணம் இருக்கிறது. அவனுக்கென்று ஒரு இடமும் இருக்கிறது. அரசியலில் ஈடுபட எனக்கு இது சரியான நேரம் இல்லை. அப்படி ஒரு முடிவு எடுத்தால் அதை வெளிப்படையாக அறிவிப்பேன். முக்கியஸ்தர்களை சந்தித்து பேசுவதெல்லாம் மரியாதை நிமித்தம்தான். அதில் அரசியல் இல்லை. நான் அரசியலுக்கு வந்தால் எனது பார்வை நாட்டு மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்பதாகவே இருக்கும்.சர்ச்சைகள் ஊழல்களில் சிக்கக்கூடாது என்பதும் முக்கியமானதாக இருக்கும். நல்ல கதைகள் அமைந்தால் வேறு ஹீரோக்களுடன் இணைந்து நடிக்கத் தயாராக இருக்கிறேன். சமூகத்துக்கு கருத்துக்கள் சொல்லும் படங்களை தயாரிக்கும் திட்டமும் இருக்கிறது. என் வாழ்க்கையில் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது எதுவெனில் கோவையில் நடந்த குழந்தைகள் கற்பழிப்பு, கொலைச் சம்பவம் ஆகும். அது எனக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. இதுபோன்ற சம்பவங்களில் குற்றவாளிகளை உடனே தூக்கில் தொங்கவிட்டு கொல்ல வேண்டும் என விஜய் கூறினார். (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

# காஷ்மீர் மனித உரிமை நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவலை

இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்ட காஷ்மீர் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட வட கிழக்கு மாநிலங்களில் பாதுகாப்புப்படையினருக்கு பெருமளவு அதிகாரங்களை வழங்கும் சிறப்புச் சட்டங்கள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என மனித உரிமைகளுக்கான ஐ.நா. மன்ற சிறப்புப் பிரதிநிதி மார்க்கரெட் செகாக்யா வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே பல முறைகள் ஐ.நா. மனித உரிமை பிரிவினர் காஷ் மீரில் பயணம் மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் முதல் முறையாக இந்திய அரசு தற்போது அவர்களது பயணத்திற்கு அனுமதி அளித்திருந்தது. அதையடுத்து காஷ்மீர், ஒரிசா, மேற்கு வங்கம், அஸாம்,குஜராத் மற்றும் டில்லியில் ஐ.நா. மன்ற மனித உரிமை அமைப்பின் சிறப்புப் பிரதிநிதி மார்க்கரெட் செகாக்யா பத்துநாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தனது பயணத்தின் முடிவில் வெள்ளியன்று டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்கரெட் செகாக்யா, பாதுகாப்புச் சட்டங்கள் பெருமளவு பயன்படுத்தப்படுவது குறித்து கவலை வெளியிட்டார். குறிப்பாக இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்ட காஷ்மீர் மற்றும் வட கிழக்கு மாநிலங்களில் அதிகம் பயன்படுத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுப்பாதுகாப்புச் சட்டம் மற்றும் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகார சட்டம், ஜம்மு காஷ்மீர் பொதுப்பாதுகாப்புச் சட்டம் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ஆகியவை மனித உரிமை ஆர்வலர்களின் பணிகளை நேரடியாக பாதிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மனித உரிமை ஆர்வலர்கள் ,நக்சலைட்டுகள் ,தீவிரவாதிகள் ,தேச விரோத சக்திகள் என்று முத்திரை குத்தப்பட்டு துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவது கவலையளிப்பதாக அவர் தெரிவித்தார்.

பிரிவினை வாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை வெளிக்கொணரும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் அரசு மற்றும் எதிர்த்தரப்பினர் ஆகிய இருவராலும் குறி வைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். இந்தியாவில் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் திட்டங்கள் எதிர்க்கும் மனித உரிமை ஆர்வலர்களுக்கும் கூட குறி வைக்கப்படுவதாகவும் மனித உரிமை மீறல்,ஊழல் அதிகாரிகள் உட்பட தவறான நிர்வாகம் ஆகியவற்றை தோல் உரித்துக்காட்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் போராடும் ஆர்வலர்கள் மீதான தாக்குதலும் அதிகரித்து வருவதாக அவர் கவலை வெளியிட்டார்.

மனித உரிமை ஆர்வலர்களின் பணிகளை மதிக்குமாறு பாதுகாப்புப்படையினருக்கு தெளிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் நடைபெறும் அத்துமீறல்கள் குறித்து பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். மனித உரிமைகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்ற உத்தரவின் படி பொலிஸ்துறை மறுசீரமைப்பு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரை செய்துள்ளார்.

அவரது பயணம் தொடர்பான விரிவான அறிக்கை ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் முன்பு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ஸ்ரீ-2)



உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் செய்யச் செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐ.தே.கட்சியின் பிரமுகர்கள்.

## பெடரர் அதிர்ச்சி ஜோக்கோவிக் வெற்றி

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றார் நோவாக் ஜோக்கோவிக்.

ஜோக்கோவிக் நேற்று நடந்த அரையிறுதிச் சுற்றில் பெடரரை 7:6 (3), 7:5, 6:4 என்ற செட் கணக்கில் போராடி வீழ்த்தினார்.

இதன் மூலம் ஐந்தாவது முறையாக அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பை பெடரர் இழந்தார்.

கடந்த 2008-ல் அவுஸ்திரேலிய ஓபனை கைப்பற்றிய ஜோக்கோவிக், இம் முறை வெற்றி வாகை சூட முனைப்புடன் விளையாடுவார்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரில் முன்னணி வீரர்கள் பெடரரும் ரபேல் நடாலும் வெளியேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக நடாலும் தனது காலிறுதிச் சுற்றில் தோல்வியுற்று வெளியேறி, நான்காவது முறையாக தொடர்ந்து ஆஸி.ஓபனை கைப்பற்றும் வாய்ப்பை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘நெருக்கடி குறித்து கவலையில்லை’; இந்திய வீரர் யூசுப்பதான் உறுதி

(மும்பை)

உலகக்கிண்ணத் தொடரில் ஏற்படும் நெருக்கடி குறித்து கவலையில்லை. இந்திய ரசிகர்கள் எந்தச் சூழ்நிலையிலும் எங்கள் பக்கம் இருந்து ஆதரவு தருவார்கள் என நம்பு கிறேன் என இந்திய வீரர் யூசுப்பதான் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா சென்ற இந்திய அணி ஒருநாள் தொடரை இழந்தது. செஞ்சூரியனில் நடந்த கடைசிப்போட்டியில் எழுச்சிக்கண்ட யூசுப்பதான், தென்னாபிரிக்க வீரர்களின் ஷோர்ட் பிட்ச் பந்துகளை விளாசி அதிரடியாக சதமடித்தார்.

இதனிடையே எதிர்வரும் உலகக்கிண்ணத் தொடர் குறித்து யூசுப்பதான் கூறிய தாவது, தென்னாபிரிக்கத் தொடரில் மூத்த வீரர்கள் சச்சின், சேவாக், காம்பீர் ஆகியோர் இல்லாத நிலையிலும் எங்களது தன்னம்பிக்கை அதிகமாக இருந்தது. ஒவ்வொருவரும் கடுமையாக போராடினோம்.

இதற்கு முக்கிய காரணம் பயிற்சியாளர் கிறிஸ்டன்தான். தென்னாபிரிக்காவிலுள்ள சூழ்நிலைகளை நன்கு அறிந்த அவர், மிகவும் உதவியாக இருந்தார். அணி நிர்வாகமும் பல திட்டங்களை செயற்படுத்தியது.

இதற்கேற்ப கடைசிப் போட்டியில் வென்று ஒருநாள் தொடரை கைப்பற்ற முடியும் என்ற உறுதியான நம்பிக்கையிருந்தது. என்ன செய்ய? நினைத்ததெல்லாம் நடப்பதில்லையே. இருந்தாலும் கடந்த சில தொடர்களைவிட தென்னாபிரிக்க மண்ணில் இம் முறை வியக்கத்தக்க வகையில் விளையாடினோம்.

ஒருநாள் தொடரை வென்றிருந்தால் நல்லதாக இருந்திருக்கும் அடுத்த உலகக் கிண்ணத் தொடர்வரவுள்ள நிலையில், அதுகுறித்து தொடர்ந்து நினைத்துக்கொண்டிருக்க முடியாது.

**கவலையில்லை**





உலகக்கிண்ணத் தொடரில் நெருக்கடி குறித்தெல்லாம் அதிக கவலையில்லை. இறைவன் கொடுத்த இயற்கையான திறமையை நம்பினால் போதும்மற்றவை தானாக நடக்கும். இந்திய அணிக்காக எந்த சிக்கலும் இல்லாமல் விளையாட வேண்டும். அணி வெற்றி பெறும்வரை, களத்தில் துடுப்பாட்டம் செய்ய வேண்டும் என நினைத்துள்ளேன்.

**ரசிகர்கள் ஆதரவு**

உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பான மற்றும் மோசமான நேரங்களில் ரசிகர்கள் ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். போட்டியில் தோற்கும் நேரங்களில் இழந்த தன்னம்பிக்கையை மீண்டும் பெற இந்த ஆதரவு உதவும். இத் தொடரில் இந்திய ரசிகர்கள் எப்போதும் எங்கள் பக்கம் இருப்பார்கள் என உறுதியாக நம்புகிறோம்.

**நம்பிக்கையுள்ளது**


உள்ளூர் மற்றும் ஐ.பி.எல். போட்டிகளில் பல இடங்களில் களமிறங்கி துடுப்பாட்டம் செய்து அணியை தோல்வியிலிருந்து மீட்டு வெற்றிபெற செய்துள்ளேன். சர்வதேச அளவில் நியூசிலாந்து அணிக்கெதிரான சதம் நம்பிக்கையை அதிகரித்தது.

ஆனால் தென்னாபிரிக்காவில் கடைசி வரை களத்திலிருந்து எந்தப் போட்டியிலும் வெற்றித் தேடித்தராதது மிகவும் ஏமாற்றமாகவே இருந்தது. எதிர்வரும் உலகக்கிண்ணத் தொடரில் இதை நிறைவேற்றுவேன் என நம்புகிறேன். இவ்வாறு யூசுப்பதான் தெரிவித்துள்ளார்.

## உலகக்கிண்ணத் தொடர்

# இந்தியா-இங்கிலாந்து மோதும் போட்டி கொல்கத்தா மைதானத்தில் நடைபெறாது

## ஐ.சி.சி. ஆய்வுக்குழு அறிவிப்பு



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாக இன்னும் மூன்று வாரங்களே உள்ள நிலையில் இந்தியாவின் முக்கியமான கிரிக்கெட் மைதானங்களில் ஒன்றான கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸ் அடுத்த மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டிகளுக்கு முன்னர் தயாராகாது என சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பணிகள் முடிபடையாத நிலையில் ஈடன் கார்டன்ஸ் விளையாட்டரங்கம் இதன் காரணமாக இந்திய-இங்கிலாந்து அணிக்கு இடையே பெப்ரவரி 27 ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டி வேறு ஒரு மைதானத்துக்கு மாற்றப்படுகிறது.

எனினும் இறுதிப் போட்டி நடைபெறவுள்ள மும்பையின் வான்கடே மைதானம் போட்டிக்கு தயார் நிலையில் இருக்கிறது என்றும் அங்கு சிறிய பணிகளே எஞ்சியுள்ளன என்றும் சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விளையாட்டு அரங்குகளை ஆய்வு செய்யும் குழுவானது போட்டிகள் நடைபெறவிருந்த ஐந்து மைதானங்களின் தயார் நிலை குறித்த தனது அறிக்கையை நேற்று வெளியிட்டது.

இந்தக் குழுவில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினர் தலைமை நிர்வாக அதிகாரியும் போட்டிகளுக்கான இயக்குநருமான ரத்னாகர் ஷெட்டியும் இடம்பெற்றிருந்தார்.

இலங்கையில் போட்டிகள் நடைபெறவிருந்த மூன்று அரங்குகளை ஆய்வு செய்த இந்தக் குழு அவை எஞ்சியிருக்கும் சிற்சில பணிகளை குறித்த நேரத்தில் முடிக்கும் பட்சத்தில் போட்டிகள் அங்கு நடைபெறும் என்று அறிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள பிரேமதாச விளையாட்டரங்கம், கண்டியிலுள்ள பலேகலே விளையாட்டரங்கம் மற்றும் அம்பாந்தோட்டையிலுள்ள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கம் ஆகியவற்றிலுள்ள மைதானங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

கொல்கத்தாவிலுள்ள ஈடன் கார்டன்ஸ் விளையாட்டு மைதானம் சுமார் 90 ஆயிரம் பேர் போட்டிகளை காணும் வசதியைக் கொண்டது. அந்த அரங்கில் புனரமைப்பு பணிகள் இன்னும் முடியவில்லை.

அங்கு இந்த உலகக்கிண்ண தொடரில் போது நான்கு ஆட்டங்கள் நடைபெறவிருந்த நிலையில் இந்தியா விளையாடும் முதல் போட்டி அங்கு நடைபெறாது என்பது ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளது.

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான போட்டியை வேறு மைதானத்தில் நடத்துவது குறித்த பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எனினும் ஈடன் கார்டன்ஸில் மற்ற மூன்று போட்டிகளும் நடைபெறும் என்று கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விளையாட்டரங்கங்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று கெடு விதிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது ஒரு மாதம் நீடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## மலையகத்தில்...

சபை, ஹட்டன்-டிக்கோய நகர சபை, தலவாக்கலை, லிந்துல்லை நகரசபை ஆகியவற்றில் ஏணி சின்னத்திலும், நுவரேலியா பிரதேச சபை கொத்மலை பிரதேசசபை, வலப்பனை பிரதேசசபை ஆகியவற்றில் மீன் சின்னத்திலும் இந்த மலையக தமிழ் கூட்டமைப்பு போட்டியிடுமென இக் கூட்டமைப்பின் தலைவர்களான மனோ கணேசனும், எஸ்.சதாசிவமும் நுவரெலியாவிலிருந்து தெரிவித்துள்ளனர்.

நுவரெலிய மாவட்ட செயலகத்தில் இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை ஜனநாயக மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரனும், இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் எஸ்.சதாசிவமும் கையளித்தனர். இந்த கூட்டமைப்பில் நவசம சமாஜய கட்சி சார்பாக ஒரு வேட்பாளரும் அம்பகமுவ பிரதேச சபைக்காக போட்டியிடுகின்றார். (ச-5)

# அரசு தாக்கல் செய்த அனைத்...

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் (United People's Freedom Alliance) வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு கட்சியின் பெயர் தொடர்பான சிக்கலே காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

ஆனால் இவ் வேட்பு மனுக்களில் கட்சியின் பெயர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என தமிழில் எழுதப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறானபெயரில் கட்சி பதிவுசெய்யப்படவில்லை எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரிலேயே கட்சியொன்று இருப்பதாகவும் தெரிவித்து இவ் வேட்பு மனுக்களை தேர்தல் அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

இந் நிராகரிப்புத் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக ஐ.ம.சு.முன்னணியின் பங்காளிக் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதுவரை பிரசாரங்கள் அனைத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற பெயரையே பயன்படுத்தினோம். அந்த அடிப்படையிலேயே வேட்பு மனுக்களிலும் அப் பெயரைப் பயன் படுத்தினோம். இதனால் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நாம் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளோம் என அவர் கூறினார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியினால் தாக்கல் செய்யப்பட்ட 16 வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபரும் யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வேட்பு மனுத்தாக்கலைத் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் இவர் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களும் தேர்தல் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 13 பிரதேச சபைகள் மற்றும் 03 நகர சபைகளை உள்ளடக்கிய உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் 16 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இவை தவிர கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தக் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட 03 வேட்பு மனு உட்பட 19 வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. அத்துடன் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத்தேர்தலுக்காக யாழ்.மாவட்டத்தில் 63 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 20 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 04 கட்சிகளினதும் 06 சுயேட்சைகளினதும் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஐக்கிய சோசலிசக் கட்சி ஆகியன, சுயேட்சையாகப் போட்டியிட மனுத்தாக்கல் செய்தவர்களில் பருத்தித்துறை நகரசபை வேலன் குணரத்தினம், பருத்தித்துறை பிரதேசசபையில் தங்கவேலன், சாவகச்சேரிப் பிரதேச சபையில் அமரசேகரம் செல்லையா, கந்தர் ஆறுமுகம், வல்வெட்டித்துறை குணசிங்கம் மோகன குமார், வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை கந்தையா ஆகியோரும் அடங்குவர்.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தில் 03 பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுத்தாக்கல் மேற்கொள்ளப்பட்டதில் 15 வேட்பு மனுக்கள் கிடைத்துள்ளதாகவும்அதில் 08 மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் 07 நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் தாக்கல் செய்யப்பட்ட 03 வேட்பு மனுக்களும் இலங்கை தமிழரசுக் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட 02 வேட்பு மனுக்களும் நவ சமாயக் கட்சியின் ஒரு வேட்பு மனுவும், ஐ.தே. கட்சியின் ஒன்றும் என மொத்தம் 07 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது. (ச-5,6)

# பிரதான அரசி...

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 16 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றம் செல்லப்போவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வாய்ப்பை...

வேட்பு மனுத்தாக்கல் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார். இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் முறையான இணக்கப்பாடு இல்லாத நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் வல்வெட்டித்துறை நகரசபைக்கு வேட்பாளராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்து அவர் அதிருப்தி வெளியிட்டிருக்கின்றார். (ச-5)

# ஜனநாயகத்...

டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் யாழ்ப்பாணத்தில் தற்போது ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. எனவே ஜனநாயக முறையிலான தேர்தல் இடம்பெறுமா என சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே எதிர்வரும் காலங்களில் ஒரு மாற்றம்ஏற்பட தற்போது நடைபெறும் இந்தச் சிறிய தேர்தலில் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (ச-5)

# சிவில் நீதிமன்றக் கட்டமைப்...

கொள்ளப்பட்ட நீதிமன்றமா? என்ற கேள்விக்கு உயர்நீதி மன்றம் வழங்கியுள்ள விளக்கம் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

நான் வழக்கின் தீர்ப்பை முழுமையாகப் படிக்கவில்லை. இராணுவ நீதிமன்றத்தால் மரண தண்டனை கூட வழங்க முடியும் என்பதால் அதனை ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றமாகக் கருதவேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இராணுவச் சட்டத்தின்படியே இராணுவ நீதிமன்றம் ஸ்தாபிக்கப்படுகிறது. உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்கள் அரசியல் அமைப்பின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டவை. இதனால் தண்டனை வழங்கும் அதிகாரம் இருப்பதால் மாத்திரம் இராணுவ நீதிமன்றம் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதிமன்றமா? என்ற கேள்வி எழுகிறது.

இராணுவ நீதிமன்றம் என்பது சுயாதீனமான நிறுவனம் அல்ல. சிவில் நீதிமன்றம் சுயாதீனமானது. இந்த நீதிமன்றத்தை வழிநடத்தும் அதிகாரிகளும் சுயாதீனமானவர்கள். இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமிப்பது ஜனாதிபதி. அந்த நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புக்கும் கையெழுத்திடுபவரும் ஜனாதிபதி. இராணுவ நீதிமன்றம் என்பது நிறைவேற்று அதிகாரத்தின் சபை. அத்துடன் இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகள் நிறுவனத்திற்குள் உள்ளடங்குபவர்கள், இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகள் இறுதியில் இராணுவ தளபதியின் உத்தரவிற்கு அடி பணிய வேண்டியேற்படும்.

தண்டனை வழங்கும் நடவடிக்கையை மாத்திரம் கவனத்திற் கொண்டு உயர் நீதிமன்றம், இராணுவ நீதிமன்றத்தை அரசியலமைப்புக்கு உட்பட்ட நீதிமன்றம் என்ற தீர்ப்பை வழங்கியுள்ளது எனவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# யுத்தத்தால் இடம்...

குழு பற்றிய விடயங்கள் பற்றி தாம் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நிபுணர்கள் குழுவின் நோக்கங்க ளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தாம் இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை எனவும் நிபுணர்கள் குழுவை சந்திக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# மார்ச் 17ஆம்...

நாட்டின் பிரதான கட்சிகளான ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன தமது வேட்புமனுக்களை மாவட்ட காரியாலயங்களில் நேற்று தாக்கல் செய்தன.

நாடுமுழுவதும் உள்ள 301 பிரதேச சபைகள் அனைத்துக்கும் ஒரே நாளில் தேர்தல் இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மார்ச் மாதம் 12 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என பிரதமர் முன்னர் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


A/L வரலாறு M.PATHMAN M.A

2010இல் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் என்னிடம் கற்று உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களை வாழ்த்துகின்றேன்.

மாவட்ட நிலை 50 இனுள் பெற்றோர்

◆ கெ.நிரேகா-09 ◆ ரா.சிவாஜினி-08 (முல்லை) ◆ கா.தர்மசுகி-17
◆ ஆ.ரூபனா-23 ◆ பா.கஜநேசன்-26 ◆ க.கஜேந்தினி-32
◆ ம.நிலானி -34 ◆ சி.நிரோஜா-44

மேலும் A தர சித்தி பெற்றோர்

◆சி.சுகன்யா-A ◆செ.நிசாந்தினி-A ◆சு.சுகன்யா-A ◆நி.வரதீஸ்வரி-A
◆ச.ஜெனனிதா-A ◆பு.கஜிந்தன்-A ◆வி.டியூக்சினி-A ◆ச.சிவானுஜா-A
◆பு.நிரோசிகா-A ◆ச.சசிகலா-A ◆சே.தர்சனா-A ◆க.காயத்திரி-A
◆த.தக்சனா-A ◆கா.கஜரூபன்-A ◆ச.ரேணுகா-A ◆நா.தினுபா-A

பாடம் மாறி 6 மாதங்கள் கற்று A சித்தி பெற்றோர்

◆ க.துஷ்யந்தினி-A ◆ அ.மதனகுமார்-A

மேலும் B தர சித்தி பெற்ற 56 மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்.

ஆசிரியர்: M.Pathman Dip.in Psy (First class), B.A (Hons) His.Spl., M.A

கற்பிக்கும் இடங்கள்

D.M.I. யாழ்ப்பாணம் | BITSMANS மானிப்பாய் | NEW A.A.C மருதனார்மடம் | உயர் கலைக் கல்லூரி குளப்பிட்டிச் சந்தி

(சி-2303)


## மரண அறிவித்தல்

### கந்தையா பொன்னுத்துரை



இணுவிலை பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை 25.01.2011 செவ்வாய்க்கிழமை மாலை சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா-அன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் தியாகராஜா, அமரர் சரஸ்வதி, தெய்வானைப்பிள்ளை(பவளரத்தினம்)ஆகியோரின் சகோதரரும், தவமலர் (ஆசிரியை, வட்டு.இந்துக் கல்லூரி), ஜெயாமலர் (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகுமார்(யாழ்.பல்கலைக்கழகம்), பரணிகரன் (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், நுஷாலியின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் அராலி தெற்கு, வட்டுக்கோட்டை பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:-
குடும்பத்தினர்

(சி-2307)


सत्यमेव जयते

CONSULATE GENERAL OF INDIA
JAFFNA

Presents
Nalacharitham
(Second Day)

A KATHAKALI Performance
by
P.S.V.Natyasangam
Kottakal, Kerala, India

On
Sunday 30th January 2011 6.30 p.m.
At Jaffna University Auditorium, Jaffna

Entry:- Free

Supported by the Ministry of Culture and Arts
Government of Sri Lanka


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.